உ

சத்குருநாதன் துணை.

சாத்தூர்த்தாலூகா விருதுப்பட்டி நகரத்தில் திருக்கோயில்
கொண்டெழுந்தருளியிருக்கின்ற

## ஸ்ரீ குமரவேல் சுவாமிகள்.

அருப்புக்கோட்டைத்தாலூகா, கஸ்பா அருப்புக்கோட்டை
நகரத்தில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்ற

## ஸ்ரீ வயித்தியலிங்க சுவாமிகள்.

திருநெல்வேலித்தாலூகா சிந்துபூந்துறை நகரத்தில்
திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்ற

## ஸ்ரீ கேமல் சுவாமிகள்.

தென்காசித்தாலூகா வீரகேரளம்புதூர் நகரத்தில் திருக்கோயில்
கொண்டெழுந்தருளியிருக்கின்ற

## ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள்.

இவர்கள்பேரில்

# தோத்திர வெண்பாக்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா தளவாய்புரம் மகா-ா-ா-ஸ்ரீ
சுப்பிரமணியமுதலியாரவர்கள் குமாரரும், திருநெல்வேலியைச்
சார்ந்த சிந்துபூந்துறை வாசரும்.

பென்ஷன் ரிவினியூ இன்ஸ்பெக்டரும்
ஆகிய

## T. S. ஸீத்தாரப்ப முதலியார்.

இயற்றியது.

பாளையங்கோட்டை டார்லிங் அச்சு இயந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

1921

இதன் விலை அணா 10]

# அறிக்கை.

ஸ்ரீ குமரவேல் சுவாமிகள்.

ஸ்ரீ வைத்தியலிங்க சுவாமிகள்.

ஸ்ரீ சேமல் சுவாமிகள்.

ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள்.

இந்த நாதாக்கள்பேரில் யான் இயற்றியிருக்கின்ற நான்கு தோத்திர வெண்பா நூல்களில் அநேக செய்யுள்களிலுள்ள சிற்சில பதங்கள், அல்லது வாக்கியங்களுக்குப் பொருள்களும், அவசியமான சில விவரங்களும, விரிவு நூற்களில் ஆங்காங்கு வெளிப்படுத்தியிருக்கின்றேன்.

2. அல்லாமலும், அகத்தீசர், சட்டைமுனி, வால்மீகர், புசுண்டர், இராமதேவர், சுந்தரானந்தர், உரோமரிஷி, மதுராஜ யோகி, நந்தீசுரர், கொங்கணர், முதலான சித்தர்கள் நூல்கள், ஞானவாசிட்டம், பகவற்கீதை, தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, ஞானக்கும்மி, கைவல்லியம், திருவள்ளுவ நாயனார் குறள், நாலடியார், சௌந்தரியலகரி, முதலான நூல்கள், பட்டினத்துப்பிள்ளையார் தாயுமானவர், முதலானவர்கள் பாடல்கள், காசிகாண்டம், திரிசிரபுரத்தலபுராணம், திருக்குற்றாலத்தலபுராணம், பெரிய புராணம், பாரதம், முதலான பாடல்களாகிய இவைகளிலிருந்து மேற்கோட்களைச், சம்பந்தப்பட்ட மட்டில், குறிப்பிட்டுத், தெரிந்தெடுத்து, ஷை விரிவு நூற்களில் வெளிப்படுத்தியிருக்கின்றேன்.

3. அவ்விதமான மேற்கோட்களை, சித்தர்கள், நாயன்மார்கள், கவிவல்லுனர்கள், முதலானவாகள் பாடல்களிலிருந்து சம்பந்தப்பட்ட தோத்திரப்பாக்களின் அடியில் எடுத்துக்காட்டியிருக்கின்றமையால் அவைகளை வாசிக்கின்ற பெரியோர்கள் என் தோத்திர வெண்பாவை முதலில் வாசித்து அப்பால் மேற்கோட்களைக் கவனிப்பார்கள்

4. யான் சிற்றறிவுடையேனாயினும் மேற்கண்ட நான்கு நாதாக்கள்பேரிலும் என்னுடைய அன்புமுழுமையுஞ் செலுத்த, அவர்களுடைய அருளால் ஷை நாலவர் தோத்திரப்பாடல்களை யான் இயற்றியிருக்கின்றமையால், என்னுடைய பாடல்களும் ஷை பெரியோர்களால் நன்கு மதிக்கத் தகுதியுள்ளவைகளாயிருக்கக்கூடுமென்று யான் இங்ஙனம் தெரிவிக்கின்றேன்.

5. அது எவ்வாறெனில், பூவாலே, நாரும், மணம்பெற்றது, என்று உலகத்தில் சாதாரணமாய் வழங்குகின்ற பழமொழி யொன்று நாம் கேட்டிருக்கின்றோமே அதுபோல யான் எடுத்துக் காட்டியிருக்கின்ற மேற்கோட்களின் மஹத்துவத்தால் என் தோத்திர வெண்பாக்களும் ஷை பெரியோர்களால் நன்கு மதிக்கப் பெறும் என்பதாகத் துணிவுபெற்று அறிவிக்கின்றேன். இந்த அறிவிப்பு யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதுதான் என்று நம்புகின்றேன்.

6. ஆகையால், மேற்கண்டபடி பொருள்கள், விவரங்கள், மேற்கோட்கள், இவைகளையெல்லாம் பார்த்து அறிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பமுள்ளவர்கள், ஷை மேற்கோட்கள் முதலானவைகளுடன் யான் அச்சு இயற்றியிருக்கின்ற புத்தகங்களில் அவைகளைப் பார்த்துக்கொள்ளலாமென்று தெரிவித்துக்கொள்ளலானேன்.

7. அவ்விதமான விவரங்கள் அடங்கிய புத்தகங்களைத் தருவித்துப்பார்க்க பிரியமுள்ளவர்கள், எனக்கு, அடியில் கண்டிருக்கின்ற விலாசத்துக்குத், தயவுசெய்து எழுதவேண்டுமென்று யான் கேட்டுக்கொள்கின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ குமரவேல் சுவாமிகள், | தோத்திர வெண்பா, | விரிவுநூலின் | விலை அணா 10 |
| ஸ்ரீ வயித்தியலிங்க சுவாமிகள், | ஷை | ஷை | விலை அணா 9. |
| ஸ்ரீ சேமல் சுவாமிகள் | ஷை | ஷை | விலை அணா 9. |
| ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள், | ஷை | ஷை | விலை அணா 10 |

**T. S. Theetharappa Mudaliar,**

*Retired Revenue Inspector,*

*Middle Street,*

*Sindupundurai,*

*Tinnevelly Taluk.*

குறிப்பு. மேற்கண்ட நால்வர் தோத்திரவெண்பாக்களையும் செய்யுளிலக்கணத்துக்கிணங்கத் தளைசிதையாமற் பாடியிருக்கின்றேன். ஆனால், பொருள் நன்கு புலப்படும்படி வாசிக்கவேண்டியதற்காக அவசியமான இடங்களில்மட்டும் சந்திபிரித்தெழுதியிருக்கின்றேன்.

# திருத்தப் பத்திரம்

| பக்கம் | செய்யுளின் நம்பர் | செய்யுளின் வரி எண்ணம் | பக்கத்தின் வரி எண்ணம் | இப்படி இருப்பதை | இப்படி வாசித்துக்கொள்ள |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

## ஸ்ரீ குமர்வேல் சுவாமிகள் தோத்திர வெண்பா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 | 3 | 9 | றனைததுப் | றனைத்தும் |
| 4 | 24 | 2 | 11 | மெனனம் | மௌனம் |
| | 29 | 1 | 29 | ப நாவால் | பா நாவால் |
| | | 4 | 33 | குண்டே | குண்டோ |
| 7 | 52 | 4 | 29 | வ ழ்வாய் | வாழ்வாய் |

## ஸ்ரீ வயித்தியலிங்க சுவாமிகள் தோத்திர வெண்பா.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | | | 1 | ஸ்ரீ வயித்தியலிங் | ஸ்ரீ வயித்தியலிங்க |
| 3 | 17 | 3 | 12 | கேடடுவக்க | கேட்டுவக்க |
| 3 | 20 | 2 | 23 | இறங்கியோ | இரங்கியோ |
| 3 | 22 | 4 | 33 | அல்ரில் | அலரில் |
| 6 | 44 | 3 | 12 | வனைத்து | வனைத்தும் |
| 7 | 57 | 2 | 27 | சீரனுக்கு | சீரணுகு |
| 8 | 60 | 1 | 2 | நடுமே | நடுவே |
| | 68 | 4 | 37 | தந்தது | தந்து |
| 9 | 69 | 4 | 5 | கைமமா | கைம்மா |
| | 72 | 2 | 15 | தே ,நீ | தேடி,நீ |
| 10 | 83 | 4 | 25 | எனதனக்கே் | என்தனக்கே |
| 11 | 89 | 3 | 12 | எ ப்பன் | எரம்பன் |
| 12 | | | 1 | ஸ்ரீ வைத்தியலிங்க சுவரமிகள் | ஸ்ரீ வயித்தியலிங்க சுவாமிகள் தோத்திர வெண்பா |

## ஸ்ரீ கேமல் சுவாமிகள் தோத்திர வெண்பா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 4 | 3 | 25 | பாடும | பாடும் |
| | | 4 | 26 | மேம்ல் | மேல் |
| 3 | 17 | 3 | 16 | மகிழ் துலவும் | மகிழ்ந்துலவும் |
| | 20 | 4 | 29 | ஆ கிவைப்பன் | ஆக்கிவைப்பன் |
| 4 | 26 | 2 | 15 | ருள் | அருள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 29 | 3 | 28 | ந த்து | நடித்து |
| 5 | 36 | 2 | 19 | நி மலர்த் | நின்மலர்த் |
| | 40 | 3 | 36 | மௌநிலை | மௌனநிலை |
| 7 | 55 | 4 | 25 | கிளதது | கிளத்து |
| 8 | 61 | 3 | 12 | கொழிலர் | தொழிலர் |
| 9 | 70 | 2 | 11 | மிகும | மிகும் |
| 10 | 8[illegible] | 3 | 20 | பாடல்படிப்பேமார் | பாடல் படிப்போர் |
| | 82 | 2 | 23 | தேடும | தேடும் |
| 11 | 88 | 3 | 12 | எற்களிட்பாய் | எற்களிப்பாய் |
| | 91 | 4 | 25 | எனககு | எனக்கு |
| 12 | 95 | 1 | 2 | மூ லகோர் | மூவுலகோர் |
| | 98 | 1 | 11 | பொரு | பொருள் |
| | 99 | 3 | 20 | பேர்றறுகின்ற | போற்றுகின்ற |
| | 100 | 2 | 23 | கே மல் | கேமல் |
| | 101 | 4 | 19 | எற்கி | எற்கிங் |
| | 102 | 1 | 30 | சாங்கம் | சாந்தம் |
| 13 | 111 | 4 | 33 | முற்றும | முற்றும் |

## ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் தோத்திர வெண்பா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 3 | 9 | களங்க | அகளங்க |
| 2 | 8 | 3 | 12 | மௌன்குரு | மௌனகுரு |
| | 11 | 3 | 24 | ம க்காமன | மயங்காமனம் |
| 3 | 21 | 3 | 28 | செயு | செயும் |
| | 22 | 3 | 32 | செல்வன | செல்வன் |
| 4 | 30 | 2 | 27 | நாதன் | —நாதன் |
| 5 | 34 | 3 | 8 | மன்னிப்பப் | மன்னிப்புப் |
| | 41 | 2 | 35 | மகிழ்ந் | மகிழ்ந்து |
| 6 | 48 | 1 | 26 | போற்றுகின்ற | போற்றுகின்ற |
| | 49 | 1 | 30 | நான், | நான், |
| | 50 | 3 | 36 | மு த்தே | முடித்தே |
| 7 | 56 | 1 | 22 | றரு | றருள் |
| 8 | 62 | 3 | 12 | ர்கல் | ஓர்கல் |
| | 68 | 3 | 36 | காதல் ற்றேன் | காதல் உற்றேன் |
| 9 | 73 | 3 | 20 | என பாலும் | என்போலும் |
| | 74 | 3 | 24 | பதம | பதம் |
| | 75 | 2 | 27 | என்பவர்க | என்பவர்கள் |
| | 76 | 2 | 31 | பண்ணியனே | புண்ணியனே |
| | | 3 | 32 | ஐம | ஐம் |
| 10 | 83 | 1 | 22 | எலாப் | எலாம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2 | 23 | துதிக்கும | துதிக்கும் |
| | 85 | 2 | 31 | எடிபொழுதும் | எப்பொழு[illegible] |
| | | 3 | 32 | கா  ாய் | காவலராய் |
| | 86 | 1 | 34 | மணி  ய | மணியே |
| 11 | 92 | 1 | 22 | முயற்ச | முயற்சி |
| | 95 | 3 | 36 | பாற்றும் | போற்றும் |
| 12 | 100 | 1 | 18 | எண்ணரிபி | எண்ணரிய |
| | | 2 | 19 | பாகா | பாதா |
| 12 | 104 | 2 | 35 | பத்த | பத்தி |
| | | | 1 | வெண்ப | வெண்பா |



ஸ்ரீ குமரவேல் சுவாமிகள்.

18 1982

உ

# ஸ்ரீ குமரவேல் சுவாமிகள்

## தோத்திர வெண்பா.

சீரார் குமரவேல் தேவன் பிரமவித்து
நாரார் துதிவெண்பா நன்கிசைக்க—ஏரார்ந்த
தந்திமுகச் செல்வன் அருள்த் தாள்மலரை தஞ்சமென்று
புந்திதனில் எப்போதும் போற்று.

—:(o):—

குமரவேல் ஸ்வாமி,யென்றன் கேமனே நாதா
அமரர்போற் றும்பரனே ஐயா—நிமலா
பெருவாழ்வும் சித்தி முத்தி பேறனைத்தும் எற்கீ
குருவே,நீ காத்தெனையாள்க் கொள். (௧)

மீசலூர் நாதா விமலா குமரவேல்
தேசிகா எங்கும்நிறை செல்வா,நன்—னேசமுடன்
நித்தம் தொழுவேன் நினையும் வயித்தியலிங்க
அத்தனையும் கைகுவித்து ஆம். (௨)

கல்மிதக்கக் கைகாட்டும் கண்மணி குமரவேல்
அல்பகல்எந் நேரமும்யான் அத்தாநின்—சொல்லே
துதிக்கும் பதம்பெற்றுத் தொண்டுசெய்வேன் என்றும்
மதிப்பேன்,நின் பொன்னுருவம் வாய்ந்து. (௩)

மனவாக்கால் காணவொணா மாண்புடைய ஞானத்
தினகரனே பத்திமிக்கோர் செல்வா—எனையாளும்
கோவே,நல் ஈகைக் குணத்தோர் குமரவேல்
தேவே,நின் தொண்டர்,அன்றோ செப்பு. (௪)

எந்தாய் குமரவேல் ஈச்சுரனே நாயேற்குச்
சிந்தை கலங்காத செல்வமெலாம்—தந்தருளி
மைவிழியார் வஞ்ச மயக்கமின்றி மைந்தா,நீ
யுய்வாய்,உய் வாய்,என் றுரை. (௫)

அரும்பொன்னே தோகையர்கள் ஆசைவிட்டோர் நேசம்
விரும்புகின்றேன் பொல்லார்க்கு வேதப்—பெரும்பயனை
நானுரைக்கேன் ஓர்நாளும் நாதா குமரவேல்
வானவனே என்குருவாய் வாழ். (௬)

பொய்யுரையார் சூது புகலார், தன் மார்க்கமுள
தையலர்கள் மையலிலே தாழ்ந்துவிழார்—ஐயன்
குமரவேல் நற்றொண்டர் கொள்கையிவை அண்ணல்
அமரர்குரு வாக், கிதுவே ஆம். (௭)

சித்தம் தெளிந்திந்தத் தேகத்தே சித்திதரும்
வித்தை பெறவே, விருப்புற்றேன்—நித்தமும், நான்
வாசி நிலைபெற்று வாழக் குமரவேல்
தேசிக, நீ எற்கருளிச் செய். (௮)

சிந்தை அடக்கிக் குமரவேல் சேவடிமுன்
வந்து தியானித்து வந்திப்பேன்—எந்தவிதத்
துட்டரையும் நான்மதியேன் தூய அறிவிலர்அத்
துட்டரைப், பூசிப்ப மோனச் சொல். (௯)

எந்தை உனதருளால் என்கருத்தெல் லாம்முடிக்கச்
சிந்தை மகிழ்ந்திருக்கச் செய்வித்து—சந்ததமும்
கோயிலாய் என்மனத்தைக் கொள்வாய் குமரவேல்
தாயும், எனதையனும், நீ தான். (௰)

அமரர் முதலோர் அளவிட் டறியாக்
குமரவேல் நாதா, பொற் குன்றே—நிமலா, நற்
றொண்டர் பதம்பணிந்தி துட்டர் களைவிலக்கி
அண்டிநிற்பேன் நின்றாட்கீழ் ஆல். (௰௧)

நெஞ்சார நின்னை நினைவேனை நித்தமுமே
அஞ்சா திருக்க அருள்புரியும்—கஞ்சமலர்ப்
பாதா குமரவேல் பண்டே, நான் கைதொழுத
நாதா, நின் அன்டர்பணி நல்கு. (௰௨)

எனைக்காத், தாள்க் கொள்ளும் குமரவேல் எந்தை
தனக்குவமை தானாய், என் தாயாய்த்—தனதுபொற்றாள்
பாடி, அதன் கீழ்வாழ் பதம்அளித்தான் பாக்கியங்கள்
தேடிவரும் நன்மனமே தேர். (௰௩)

கோடி ரவிபோல் ஒளிரும் குமரவேல்
நாடி உணராது நான்சேர்த்த—மூட,துட்டக்
கூட்டம்,எனை நீங்கக் குருபதம்நான் போற்ற,என்றும்
நாட்டிவைப்பாய் நின்விருது நன்கு. (௰௪)

உய்யும் வழிபார்த் துருகி மனம்அடக்கிக்
கையும் சிரங்கூப்பிக் காதலிப்பேன்—மெய்யடியார்
சிந்தை குடிகொள்ளும் தேவன் குமரவேல்
எந்தை பதம்,மறவேன் யான். (௰௫)

குற்றங்கள் நீக்கிக் குணத்தினைக்,கைக் கொண்டு,நல்லோர்
சொற்றநூல் கற்கில் சுகம்,பெரிய—குற்றம்
சிறியோர்செய் தாலும் குமரவேல் தேவா
பெரியோர் சகிப்பாரோ பேசு. (௰௬)

மெய்யன்பர் போற்றுகின்ற மிக்கோன் குமரவேல்
வையமெல்லாம் காக்கின்ற மாதேவன்—ஐயன்
நினைவைச் சதாநனவில் நித்திரையில் பூண்பேன்
மனம்,வாக் கெலாம்,இவன்,வாழ் வான். (௰௭)

நற்குணங்க ளானவெலாம் நாயேற்குத் தந்தருளும்
சற்குணனே பாண்டரங்கா சாற்றரிய—நிர்க்குணனே
வல்லானே தேவா குமரவேல் மாமுனியே
எல்லாம்,நின் தன்செயலே ஈங்கு. (௰௮)

ஆரா அமுதே அடியேன்றன் பூமியெலாம்
சீரார் விளைவு செழிக்க,அருள்—நாரார்ந்த
அன்பர்பணிக் கின்புதவும் அத்தா குமரவேல்
என்குரு,நின் பொற்பணியெற் கீ. (௰௯)

இன்பம்நலம் ஏற்களிக்கும் எந்தாய் குமரவேல்
என்பெலாம் நெக்குருகி ஏத்துகின்ற—அன்பனெற்கு
அஞ்சலென்ற வாக்கை அளித்தருள்வாய் சற்குரு,நீ
தஞ்சம்,என்றே வாழ்வேன்யான் தான். (௨௰)

என்றன் குலதெய்வம் எந்தை குமரவேல்.
என்று மலர்தூவி எந்நாளும்—நின்றன்பொற்
பாதம் சதாபோற்றும் பத்தரைக்கண் டால்,அவரென்
நாதன் எனத்தொழுவேன் நான். (௨௰௧)

அண்டர்பணி தேவா குமரவேல் அத்த,எங்கும்
கண்டஎலாம் நீயென்றே கைகுவித்துப்—பண்டொருநாள்
அன்புநிறை நன்மனம்பெற் றந்நாள் முதல்த்தொடர்ந்து
நின்பணிக்காள் ஆனேன் நிசம். (௨௰௨)

தொண்டர்க் கெளிய சுகவான் குமரவேல்
பிண்டர்க் கரியன்,இவன் மெய்ந்நீர்க்கைக்—கொண்டு
மனத்திருத்தி வைத்தே தன் மகிழ்ந்தினிது வாழ்வேன்
எனைத்தொடரும் வல்வினையே திங்கு. (௨௰௩)

முன்னாளின் தீவினைகள் முற்றும் ஒழித்தருளி
இந்நாளில் நன்மெனனம் எற்களிப்பன்—மன்னுச்ச
நாதம் மிகப்பிறக்கும் நாதன் குமரவேல்
பாதம் துணையென்,நீ பற்று. (௨௰௪)

பொன்னுலகும் மண்ணுலகும் போற்றும் குமரவேல்
தன்னிருவலைச் சிந்தித்துத் தாடொழுவேற்—கெந்நாளும்
செல்வம் வளர்ந்தோங்கும் சித்தி,முத்தி சேர்ந்துவரும்
வல்லாளர் கண்டதிந்த மாண்பு. (௨௰௫)

சிந்தை அடக்கித் தியானிக்கும் வல்லமையைத்
தந்தாய் குமரவேல் தாட்டிகனே—சுந்தரனே
நல்லனே பாடுகின்றேன் நன்மோன வாழ்வுபெற
எல்லாம்,முன் விட்டகுறை எற்கு. (௨௰௬)

பாவச் செயற்கெலாம் பார்வை,முதல்க் காரணந்தான்
தேவ குமரவேல் செல்வ,நின்மேல்—ஆவலுடன்
தோத்திர நூல்பாடித் தொழுவேன் சதா,வெனை நீ
காத்தருளி ஆள்க்கொள்வாய் காண். (௨௰௭)

முக்காலமும்,உணரும் மோன குமரவேல்
தக்கோனே வாசிநிலை தந்தருளும்—சொக்கே,நின்
சித்தம்மகி ழப்பாடிச் சேவிப்பேன் மாண்பருளி
நித்தமும்வாழ் என்மனத்துள் நீ. (௨௰௮)

பரநாவால்ப் பாடிப் பணிந்து நினைந்துருகி
மோன குமரவேல் முத்தர,என்—றே, நாளும்
தோத்திரங்கள் செய்வேன்,நின் தொண்டர் தமைமதியார்
சாத்திரத்துக் குண்டே கதி. (௨௰௯)

சிங்கப் பிரானே,நற் றேவா குமரவேல்
தங்கப் பொருப்பே,இத் தாரணியில்—எங்கெங்கும்
பூதம்ஐந்தும் உட்கலந்த பூரணன்,நீ என்னுள்வளர்
நாதனும்,நீ நின்பெயரே நன்கு. (௩௰)

சித்தனே மூலகுரு செல்வா குமரவேல்
அத்தனே பூரணனே ஆரியனே—முத்தனே
நல்லானே மோனநிலை நாயேற்குத் தந்தருள்வாய்
எல்லாம்,சம் பூரணமாம் எற்கு. (௩௰௧)

பாராரும் விண்ணோரும் பாதாளத் தாரும்,பின்
யாாரும் காண்டற் கரியான்,கேள்—நேரே,நீ
விஞ்சைகிரி மேவில் குமரவேல் வீற்றிருப்பன்
அஞ்சல்,அஞ்சல் என்பன்,நினை ஆங்கு. (௩௰௨)

மின்னார் மணிமுடியான் வேதன் குமரவேல்
பொன்னார் பதம்இரண்டும் பூமலரால்ப்—பன்னாளும்
பூசிப்பேன் போற்றிசெய்வேன் போதமிகுந் தாண்மையின்றி
நேசிப்பேன் வாழ்வேன் நிசம். (௩௰௩)

கொம்பில் தனித்தேன்,இக் கோலக் குமரவேல்
வம்பர்க் ககப்படா மா,பலவான்—எம்பெருமான்
ஒப்புவமை யாரும் உரைக்கவொணா ஐக்கியன்தாள்
எப்பொழுதும் கைதொழுவேன் யான். (௩௰௪)

ஏதேது சென்மம் எடுத்தாலும் யான்மறவேன்
நீதன் குமரவேல் நற்பாதம்—மாதவமே
எந்நாளும் செய்வேன்,நான் எவ்வுயிரும் என்னுயிர்போல்ப்
பன்னாளுங் காப்பேன் பரிந்து. (௩௰௫)

உடலுள் உயிர்போன்ற உள்ளொளியை நாடும்
அடியர் மனம்வாழ் அவன்,மெய்—வடிவெழுத
ஒண்ணாக் குமரவேல் உத்தமர்க்கு யோகசித்தி
தண்ணளியால் இங்கருள்வன் தான். (௩௰௬)

எந்த நிலைமையிலும் என்குருதாள் யான்மறக்கேன்
சிந்தை அவன்பால்ச் செலுத்திநிற்பேன்—சந்ததமும்
இன்ப மொழியுடையான் ஏகன் குமரவேல்
அன்பர் பயமிலரோ ஆட். (௩௰௭)

பாலினுள்நெய் போலும் படுவிறகுள்த் தீபோலும்
சீலன் குமரவேல் தேவாதி—ஞாலமெங்கும்
எல்லா உயிரினுளும் எந்நாளும் வாழ்வன், என்றே
நல்லோர் மொழிவரென நாட்டு. (௩௰அ)

பதம்மூன்றும் ஒன்றென்றாய்ப் பற்றுபவர் நான்காம்
பதமான ஞானநிலை பற்றி—நிதமும்
பணிவார் குமரவேல் பாதமலர் மோன
மணிவிளக்காய் வாழ்வர் மகிழ்ந்து. (௩௰௯)

மூவா முதல்வர் மா முத்தா குமரவேல்
தேவா, மூலக்கனலைச் சென்றெழுப்பி—ஆவலுடன்
மூன்றான மண்டலத்தை முட்டவே, உளதாகின்ற
ஆன்றோர்க் கிணை, அவரே ஆம். (௪௰)

தவம்புரிந்து தீதொருவித் தாளிணையைப் போற்றிச்
சிவமயமே என்னும், எனைத் தேடி—நவநிதிகள்
மிக்கநல பொன், அளிக்க வித்தன் குமரவேல்
எக்காலும் காத்திருப்பன் இங்கு. (௪௰௧)

தெருளுடைய மேலோர் சிறியோனை நோக்கில்
மருளுடையார்க் கத்குணங்கள் மாறி—அருளுடையார்
ஆவார் குமரவேல் அவ்வாறே திட்டர்க்கும்
ஈவான், பல் நற்குணங்கள் ஈங்கு. (௪௰௨)

திக்கெலாம் சீர்த்தி சிறக்கவாழ் வுற்றவரும்
மிக்கோன் குமரவேல் மெய்ப்பணியை—எக்காலும்
வேண்டி, அவன் சந்நிதிமுன் வீழ்ந்தெழுந்து நாதா, என்
ஆண்டவ், என் றோலமிடு வார். (௪௰௩)

பேதம் அபேதம், இலாப் பேருளே மாயோகா
நாத குமரவேல் நன்மணியே—மாதவனே
சிற்பர், யான் அன்பு சிறந்துய்யும் நல்வாழ்வை
எற்கருள்வாய் எந்நாளும் ஈங்கு. (௪௰௪)

வானோர் புகழ்ந்து வணங்கும் குமரவேல்
தானோர் குருவெற்குச் சாற்றுங்கால்—நான், இந்தத்
தோத்திர நூல் பாடித் தொழுதேன், இதனால், இக்
காத்திரத்தே சித்தியுறும் காண். (௪௰௫)

பொல்லாத மூடர் புறங்கூறும் பாவி, எண்ணம்
செல்லாத வாறவரைச் சீர்திருத்திப்—பல்காலும்
நல்லபுத்தி அன்னோர்க்கீ நாதா குமரவேல்
பல்லோர் பணியும் பா. (௪௰௬)

வஞ்சகமும் சூதும் மறைத்தென்முன் நல்லவர்போல்ப்
பஞ்சரித்துப் பேசி, அப்பாலப் பாதகங்கள்—அஞ்சாது
சொல்லவெணும் இட்டத் துரோகிகள்க்குக் குமரவேல்
நல்லுணர்வு கற்பிப்பாய் நன்கு. (௪௰௭)

தலைவன் குமரவேல் தஞ்சமெனும் என்மேல்
புலையர் புறங்கூறும் புன்சொல்—நிலையாது
கோளும் பலியா குபேரன்போல் வாழ்வுபெற்றெந்
நாளும் மகிழ்ந்திருப்பேன் நான். (௪௰௮)

கண்ணே மணியே கதியளிக்கும் கற்பகமே
விண்ணோ குமரவேல் வேந்தே, நல்—அண்ணு
மனதடக்கம் உள்ளோரைக் கண்டவுடன் வந்தித்
தெனதுகுல தெய்வமென்பேன் யான். (௪௰௯)

நித்தமும்நின் சந்நிதிநேர் நின்று குமரவேல்
அத்தா, என் றோலமிட்டு அன்புடனே—பத்திமிக்கு
இந்நூல், ஐம் பான்வெண்பாக் கொண்டேத்து வோர்என்றும்
சின்மயமாய் வாழ்ந்திருப்பர் தேர்ந்து. (௫௰)

தவராச சிங்கம் குமரவேல் தாதை
சிவ்பரனும் வைத்தியப்பன் செல்வர் — இவர்கள்பெயர்
நித்தம் சதாசெபிப்போர் நீடாயுள் யோகமெய்தி
முத்திபெற்று வாழ்வார் மொழி. (௫௰௧)

அறிந்தும் மறந்தும் அறியாமை யாலும்
மறஞ்செய் தவரும் வணங்கில்ச்—சிறந்தமுத்தர்
இவ்விருவர் மன்னிப்பர் என்று, குமரவேல்
செவ்வடிக்கீழ் வாழ்வாய், திறம். (௫௰௨)

காவலனே நாதா குமரவேல் கர்த்தாவே
பாவலனே சீராளா பத்தர்பணி—தேவா
அழிவில்லா ஞான அருள்க்கடலே யோக
வழியனைத்தும் எற்கருள்செய் வாய்ந்து. (௫௰௩)

பொல்லாரும் வந்து குமரவேல் பூசைசெய்து
வல்லானே என்றுதொழில் வாழ்வுறுவர் — நல்ல
அறிமுகத்தோர் தப்புதற்குப் போர்க்களத்தில் அன்பன்
குறிவிலக்கல் போல், எனநீ கூறு. (௫௪)

பத்தர்க் கிரங்கிப் பழவினைகள் போக்கியருள்
சித்தர் இருவர்பெயர் செப்பக்கேள் — முத்தன்
குமரவேல் வைத்தியலிங்கக் கோமான் இவரோ
நமதுகுல தெய்வம், நிதம் நாடு. (௫௫)

என்னிரண்டு நாதர்கள் எந்தை குமரவேல்
சின்மயனும் வைத்தியலிங்கச் செல்வன், இன்னோர் — சந்நிதி
என்தோத் திரநூல் இரண்டும் சதாஇசைத்துப் [முன்
பன்னாளும் வாழ்ந்திருப்பேன் பார். (௫௬)

இப்பாடல் தீர்த்தாரப் பண்சொற்றுன் என்றுமகிழ்
அப்பா குமரவேல் ஆண்டவனே — எப்போதும்
நல்வாழ்வு எற்களிப்பாய் நான்மகிழ்ச்சி பெற்றுய்வேன்
செல்வாக்கும் சீரும் சிறந்து. (௫௭)

அண்ணல் குமரவேல் அத்தன் துதிபெருகும்
வண்ணம், ஐம்பான் வெண்பாவாழ் வாக்குரையை — எண்ணி
இப்பாடல் செய்தேன்யான் ஈதும் மதுரகவி [யன்பாய்
செப்புவபோல் கொள்வான் திறம். (௫௮)

நேயம்,முற்றி இப்பாடல் நின்மேல் உரைத்தேன்யான்
செய்குற்றம் தாய்பொறுக்கும் செய்கைபோல் — நீயே
சகிப்பாய் குமரவேல் தப்புறினும் பேணி
மகிழ்ச்சியுறும் பேறருள்செய் வாய். (௫௯)

## ஸ்ரீகுமரவேல் சுவாமிகள்

தோத்திரவெண்பா

முற்றுப்பெற்றது.



ஸ்ரீ வயித்தியலிங்க சுவாமிகள்

சென்னை-600 0

உ

# ஸ்ரீ வயித்தியலிங்க சுவாமிகள்

# தோத்திர வெண்பா.

சீரார்ந்த வைத்தியப்ப தேசிகனும் எந்தையின்மேற்
பேரார்ந்த செல்வம் முத்திப் பேறுபெற—வாரார்ந்த
செந்தமிழ் வெண் பா நூறு செப்புதற்குத் தண்ணிழலு
கந்தருள்பண் ஐந்துகரன் காப்பு.

——:(o):——

புகழ்சேர்நல் வைத்தியப்ப போதன், எண் பொற்றாள்
திகழ்சீர்கொள் என்சிரமேற் சேர்த்து—நிகழ்நார்மன்
என்னுளத்தே கொண்டேன் இகபரங்கள் நன்றாக
மன்னுதற்கே ஆய்ந்து மதித்து. (க)

பொன்னார் அடியிணையைப் போற்றாமல் பாவியேன்
சின்னாள் அகற்றியதைத் தேர்ந்துநீ—தென்னார், என்
இல்லதனில் வந்தாயே எற்களிப்பாய் வைத்தியப்பா
நல்,உயர்,செல் வப்;பொருளை நன்கு. (உ)

பொன்னே வயித்தியப்ப பூபமிகு வாழ்வளித்து
நின்னை மறவா நெறிதருவாய்—முன்னாளில்
எத்தவம்நான் செய்தேனோ என்னகத்தே வந்தாய், எண்
பத்தருக்கே தோற்றும் பரா. (ங)

மனையவளும் நானும் மகிழ்ந்துதொழ யாம்வாழ்
மனைவருதல் நாடோறும் வைத்தாய்—நினைவரிய
ஆதிபர னே,வயித்தி யப்பா கொடு;சொன்னப்
பூதியொடும் யோகம் புரிந்து. (ச)

போதமனே தொண்டுநின்றன் பூங்கழற்கே பூண்ட;அன்றே
ஏதம்இலேன் என்றும் இகவாழ்வும்—மூதறிவோர்
நாடுமொரு செல்வமதும் வைத்தியப்பா நான்பெறுவேன்
ஈடொறுவர் இல்லை எனக்கு. (ரு)

இவர்பகைஞர் தீங்கிழைப்பர் என்பர் சிலபேர்
அவர்பகையின் ஏதுசெய ஆகும்—தவர்மெச்ச
வாழ்வனைத்தும் எற்கிந்து வைத்தியப்பன் காப்பான்,இப்
பாழ்மனத்தர்க் கேனோ பயம். (௬)

இரவுபகல் பூசிப்பேன் எற்கீ,நல் வாழ்வை
குரவுகழ்மெய் வைத்தியப்பக் கோனே— உரவுடையோய்
எவ்வுலகும் போற்றும்நிலை ஏகவஸ்தே இன்னல்,எண்ணுந்
தெவ்வுலற உன்னருள்செய் செய் (௭)

என்பகைவர் யாரும்இலை எல்லாரும் என்றனக்கே
அன்பமைவர் ஆருவரா ஆரணனே—மன்பரிசார்
ஈருலகச் செல்வம்,எலாம் ஈந்து வயித்தியப்பா
பேருலவச் செய்தனையே பேணு. (௮)

அணைமறவாள் தன்செய்க் கமுதளிக்க அவ்வா
றெனைமறவாய் மிக்கசெல்வம் ஈவாய் — அனவரதம்
நன்மனத்தால் பூசிப்பேன் நாதா வயித்தியப்பா
உன்மலர்த்தாள்க் கென்பா நூ றுய்த்து. (௯)

அடியார் பணிவயித்தி யப்பாவே இந்தப்
படிமேல்ச் சினமில் பரசின் — அடியே,போற்
றெற்களிப்பாய் வாழ்வனைத்தும் இங்ஙன் தயாளமுளோர்
நிற்குமிக்கார் யார்,இந் நிலத்து. (௰)

தனது பழ,அடியார் தங்குழாம் சேர்த்திங்
கெனையும் வயித்தியலிங் கேந்தல்—அனவரதம் [எலாம்
கொண்டாள்வான் தொண்டு குபேரன்போல்ச் செல்வம்,
கண்டிடுவேன் என்பால் களித்து. (௰௧)

செல்வம்,எலாம் வைத்தியப்ப தேவன்,எற்கீ வான்கேண்மின்
வல்வயமா சிங்கம்தேள் மால்களிறு—பல்லரவம்
பொல்லா மிருகம்,பன்றி போற்றும்,எனைக் காண்கில்.இவை
எல்லாம் அவன் அருளாம் இங்கு. (௰௨)

வெந்தழலில்ச் சூதத்தில் லோகம்ஐந்தும் வேதிக்கச்
சிந்தைமகிழ் காயசித்தி சேர்ந்துவரச்—சந்ததமும்
எங்கும்நிறை வைத்தியப்பா என்குருவே சின்மயனே
இங்குமிக்க வாழ்வெனக்கே ஈ. (௰௩)

நினைப்பணியாப் பாவிகண்முன் நின்று,கரம் கட்டா
தெனைப்புரப்பாய் சீர்அருள்வாய் எந்தாய்— மனக்கவலை
மாற்றி, எற்கே நீ,அளிப்பாய் மன்னுசெல்வம் வைத்தியப்பா
போற்றிநிற்பேன் நின்,இணைத்தாள் போது. (௰௪)

ஞான வயித்தியப்பா நல்கெனக்குச் செல்வம்எலாம்
மோன நிலைபெற்று முக்கண்ணால்ப்—போனநாள்
இந்நாள் இனிவரும்நாள் எல்லாம் தெரிந்துகொள
நின்னை இசைப்பேன் நிதம். (௰௫)

ஞாலவேல் மன்னப்பேண் நாதன் வயித்தியப்பன்
காலமூன் றோர்ந்தறிந்த கத்தன்றன்—சீலம்
விருத்தன் குமரன் மிகப்பாலன் என்றே
இருப்பன் நிறைவாழ்வெற் கீந்து. (௰௬)

சாதல் பிறத்தல் தனைமாற்றி எண்செல்வம்
நீத வயித்தியப்ப நீயளித்துக் —கோதில்
தசநாதம் கேட்டுவக்கத் தந்தே உளம்,என்
வசமாகும் கொள்கை,ஈ வாய்ந்து. (௰௭)

குருவெனஎண் வைத்தியப்பக் கோமான் எனக்கிங்கு
இருநிதிகள் காயசித்தி ஈந்து—பரமும்
கொடுப்பான் என தகமே கோயிலாக் கொள்வான்
தடப்பார் அதிசயிக்கத் தான். (௰௮)

ஐம்புலன்செய் துன்பம்இலா ஐயா வயித்தியப்பா [பரனே
மைம்பொன்நன்கெண் வாழ்வனைத்தும் பார்த்தளிக்கும்—நம்
ஈ அறியாப் பூந்தேனே என்பூ மிகவிளைய
நீ,அருள்வாய் மேன்மேல் நிதம். (௰௯)

முன்னாள்த் தவப்பயனோ மோனன் வயித்தியப்பன்
என்மேல்க் கருத்தில் இறங்கியோ—தன்மேல்நான்
பாடஅவா வைத்தான்,நற் பாக்கியம்,ஏற் கீவன்,அவன்
பீடறிவான் நான்என்றே பேணு. (௨௰)

நல்வாக்குத் தந்தாயே நாளும் நினைப்பாட
வல்லார்க்கு வல்லானாய் வாழ்வோனே— எல்லாம்
தெரிநாதா வைத்தியப்பச் செல்வா எனது
குருவே,வாழ் வெல்லாம் கொடு. (௨௰௧)

தேடும் திரவியமே செல்வ வயித்தியப்ப
பாடும் தரந்தந்த பாக்கியமே—தோடண்
மலரின் மணமே,நல் வாழ்வெற்கீந் துன்றாள்
அலரில் மனம்,உறச்செய் வாய். (௨௰௨)

உன்றனையே சிங்காரித் துன்னழகே பார்த்து,மகிழ்ந்
தென்றும்நன்றாய் யானிருப்பேன் என்குருவே—நன்றி அறி
நான்பெறவே வாழ்வனைத்தும் நல்குவாய் வைத்தியப்ப
பான்மையனே என்று பணிந்து. (௨௰௩)

உனக்கு வயித்தியப்பா உண்டடியார் கோடி
எனக்கு வரகுரு,நீ எந்தாய்—நினைக்கும்
நவஏமம் நாடுசெல்வம் நான்பெற,இங் கீந்தே
சிவயோகம் சித்திபெறச் செய். (௨௰௪)

நலனும் உயர்வாழ்வும் நற்குணமும் முத்திப்
பலனும் அளிப்பாய் பரனே—மலர்மணம் உண்
பொற்பதமே எந்நாளும் பூசித்து வைத்தியப்பா
நிற்பேன்நான் நீசொல் நெறி. (௨௰௫)

அழிவில்லாய் என்வயித்தி யப்பா,உன் அன்பின்
வழிவில்லார் மிக்கசெல்வ வாழ்வும்—விழிமூன்றும்
பெற்றே இருக்கவும்நான் காயசித்திப் பேறுறவும்
பொற்றாள் தொழுவேன் புகழ்ந்து. (௨௰௬)

நாப்புகழ்ந்தே கைகூப்பி நான்தொழுவேன் நாடோறும்
காப்பவனே வைத்தியப்பக் காவல,இவ்—யாப்பதனால்
தோத்திரமும் செய்வேன் சுவர்ணம்அளித் தே,எனக்கிக்
காத்திரமும் சித்திபெறக் காட்டு. (௨௰௭)

எறும்பு முதல எறும்பிவரை எல்லாம்
நிறைந்த வயித்தியப்ப நீதன்—சிறந்த
பெருமான் பரஞானி பேரருளான் எற்குத்
தருவான் மிகுசெல்வம் தான். (௨௰௮)

என்காரியங்களிலே எல்லாம் பலித்தல்உண் டென்
றுண்வாக களிப்பாய்,என் உத்தமனே—நின்பாதம்
போற்றினேன் வைத்தியப்பா பொன்மிகுதி ஈவாய்நற்
றேற்றம்உளாய் நீயே துணை. (௨௰௯)

சித்தே வயித்தியப்பத் தெய்வமே செல்வமே
அத்தா இக,பர,வாழ் வத்தனையும்—நத்தும்
அடியேற்கிங் கீந்தும் அனவரதம் என்றன்
குடிகாத்தும் கொள்ளும் குரு. (௩௰)

என்,இட்ட தெய்வமே எக்கா ரியமும்,உனை
முன்னிட்டுக் கொள்வேன் முடிப்பதற்கு—உன்னிட்டேற்
கீவாயே வாழ்வனைத்தும் ஈசனே வயித்தியப்பக்
கோவே, நீ என்மெய்க்குரு. (௩௰௧)

என்றன் மனமும்நின்னையே போற்ற எங்கும் நிறை
உன்றன் புகழ்நாவால் ஓதிடுவேன்—குன்றுதல், இல்
செல்வம் எலாம் வயித்தியப்பத் தேவா கொடுத்தெனையே
வல்லவர்க்கோர் வல்லவனாய் வாழ்த்து. (௩௰௨)

என்றும்நினைப் பூசிக்க என்மனத்துள் நீதோன்றி
உன்றன் அருள் செய்வாய்,யான் உன்னடியன்— என்றன்,முற்
றீவினைத் தையா,நற் செல்வம் எலாம் ஈந்துமுத்தி
தா,வயித்தி யப்பநா தா. (௩௰௩)

கொள்பவனும் நானே கொடுப்போனும் நீயேதான்
கள்ளம்இலன் ஈதுன் கருத்தறியும்—வள்ளலே
என்வயித்தி யப்பா எனக்கீவாய் செல்வம்எலாம்
உன்னடிக்கு வாஞ்சைகொள ஓர்ந்து. (௩௰௪)

ஓயா துருகி உனைநினைப்பேன் வைத்தியப்பத்
தாயே எனைக்காக்கும் சான்றோனே—நீ;இங்கு
இருவர் தொழு,எனை,பென் றே,சாற்றி எற்குத்
தருவாய் மிகுசெல்வந் தான். (௩௰௫)

கடலைச் சுருக்கிக் கடுகைப் பெருக்கும்
திடனுள் வயித்தியப்பத் தேவே—அடியன்மேல்
வெள்ளம்எனக் கிர்பைவான் வீசி,என்றும் யான்மகிழ்ந்து
கொள்ள,மிகு செல்வம் கொடு. (௩௰௬)

கண்கொள்ளாப் பேரொளி,என் காந்தன் வயித்தியப்பன்
அண்ணலாம் காவலன்,நன் அன்புநிறை—வண்ணன்
இகபரத்துச் செல்வம்,எலாம் ஈந்து,நிதம் என்மேல்
அகம்மகிழ்ந்து வைப்பான் அருள். (௩௰௭)

கண்ணுள் மணியே கரும்பே கலக்கம், அறப்
பண்,என் தனையென்றும் பாக்கியங்கள்—நண்ணா
எனக்கே தருவாய்நீ என்வயித்தி யப்பா
உனக்கே பணிசெய்வேன் ஓர்ந்து. (௩௰௮)

இந்த எனதுடலம் சித்திபெற என்றருளை
வந்த வயித்தியப்ப வான்பொருளே—பந்தம்,இலா
கோவே குருவே கொடுப்பாய் அடியேற்குத்
தேவே மிகுசெல்வச் சீர். (௩௰௯)

கனிரசமே கற்கண்டே கற்பகமே கண்ணே
தனிமுதலே வைத்தியப்பா சாந்த—மனா,வரனே
அல்லகற்றும் எல்லே அளித்தருள்வாய் செல்வம்,எலாம்
கல்,உளத்தன் ஆனாலும் காத்து. (௪௰)

கீரமதுள் நெய்யும் கிளைவிறகுள் தீயென,ஒவ்
வோருயிரின் உள்ளே ஒளித்திருந்து—பாரதனை
ஆட்டும்,எல்,ஆம் வைத்தியப்பன் ஆன்றசெல்வம் ஈந்தெனது
வாட்டம்,எல்லாம் தீர்ப்பன் மகிழ்ந்து. (௪௰௧)

உன்தனக்கே தோத்திரஞ்செய் துன்,அடிக்கே ஆள்ஆன
என்தனக்கே செல்வம்,எலாம் ஈந்தருளி—வென்றிகொள
நல்லாய் வயித்தியப்ப நாதா எனக்குறுதி
சொல்வாய் மனவுந் துறந்து. ௪௰௨)

இவ்,அவனி என்னையுமே எங்கும் புகழ்ந்தேத்த
எவ்வெவரின் ஏற்றவாழ் வேற்களிக்க—நவ்வியுள
தாதா வயித்தியப்பா தந்தேன் உனக்கிப்பூம்
பூதான் எனுங்கவிகள் போந்து. (௪௰௩)

சத்துச்,சித் தானந்தம் தான்ஆம் வயித்தியப்பன் [நல்
சித்தம்,மகிழ்ந் தெற்களிப்பன் செல்வம்,எலாம்—முத்தியும்,
வாழ்வனைத்துப் பெற்றிடவே வாழ்த்தித் தனைப்பணிவோர்
வாழ்க,என்று வாழ்த்தும் வரன். (௪௰௪)

சிவஞான நோக்கும்,உளோர் தேடித் துதிக்கும்
தவஞான வைத்தியப்பச் சாது—புவனம்மிசை
எண் திசையும் ஏத்திடவே ஈவான்,நற் செல்வம்,அவன்
தொண்டுசெய்யும் எற்கே சுகத்து. (௪௰௫)

சித்தம் மகிழ்ச்சிபெறச் செல்வம்,எலாம் எற்களித்து
முத்தி கொடுக்கும் முதல்வா,நின்—பத்திமிகச்
செந்தா மரைப்பாதம் தேவே வயித்தியப்பத்
தந்தாய் அணி,என் தலை. (௪௰௬)

சித்தும் சடமும்ஆய்ச் சீராச் சிவமயமாய்
நித்தம் பரானந்த நேயனும்,ஆய்ச்—சுத்தநிலை
நின்றசொக்கே வைத்தியப்ப நின்மலனே மிக்கசெல்வம்
என்தனக்கே ஈவாய் இயைந்து. (௪௰௭)

எப்போதும் வைத்தியலிங்க எந்தாய்உன் பொற்பாதம்
தப்பாமல் என்மனத்தே தங்கிநிற்கும்—அப்பா
பெறுவேனே மிக்கசெல்வம் பேறனைத்தும் தூய
இறைவா,வாழ் என்குருவாய் இங்கு. (௪௰௮)

சிவஞானக் கண்ணால்த் திருக்கோலம் காணத்
தவம்நான்நிற் கிங்கிப்பற்றிச் சார்ந்தேன்— எவரும்
மதிக்கஎற்கே வைத்தியப்பா வாழ்வனைத்தும் ஈவாய்
துதிக்கநிற்பேன் பாதத் துணை. (௪௰௯)

என்அரசே,வைத்தியப்பா எற்களிப்பாய் செல்வம்எலாம்
உன்அருளே பெற்றுய்வேன் உத்தமனே—என்,இலமே
நின்பணி,செய் தற்குவரும் நேயன்முருகேசற்கு
உன்கிருபை செய்வாய் உகந்து. (௫௰

அருவே உருவே அருவுருவும் அல்லாப்
பொருளே நினதுபொற்றாள் போற்றக்—குருபரனே
பந்தம்,அற நின்றவனே பாக்கியனே வைத்தியப்பா
தந்தருள்க மிக்கசெல்வம் தான். (௫௰௧)

செல்வம்,எலாம் தந்தே சிறப்பு,நலம் ஈந்தருளி
அல்லல்,எலாம் தீர்த்தே அடியேற்கிங்—கெல்லா
வரமும் தருவான் வயித்தியப்பன் தெய்வப்
புருடன் மனமே புகல். (௫௰௨)

கல்மனத்தேன் என்னைக்கரையேற்ற நீநினைத்தாய்
நன்மனத்தாய் வைத்தியப்ப நாதனே—நின்பதம்,நான்
போற்ற இகபரத்தின் போகம்,எலாம் ஈந்தென்னைத்
தேற்றல் நினக்கே சிறப்பு. (௫௰௩)

இகவாழ்வு மோக்கம்,எற்கே வைத்தியப்பன் ஈவான்
புகழ்ஓங்கு ஞானப்புருடன்—அகம்மகிழ்ந்து
வந்தான் எனதுகுலம் வாழ்விப்பான் வாய்மடுப்பேன்
செந்தா மரைப்பாதத் தேன். (௫௰௪

தவம்,எலாம் ஓர்உருவாம் சாந்தகுணக் குன்றே
சிவஞான நோக்குள,நற் றேவே—புவனிதொழு
வந்தாள் வரேந்திரனே வைத்தியப்பா வாய்மையனே
எந்தாய் மிகுவாழ்வெற் கீ. (௫௰௫)

தாயினும்,மேற் சீர்சிறந்த தாயகமே தத்பதமே
காயறியாத் தீங்கனியே கற்பகமே—தூய
தருவேபோல் வைத்தியப்ப ஸ்வாமி எனக்குக்
குருவே,காண் செல்வம் கொடு. (௫௰௬)

தூரம்,அணித் தானாய் துரியச் சுடர்ஆனாய்
காருணிய வைத்தியப்பக் கண்ணுதலே—சீராகு
வாழ்வனைத்தும் ஈவாய் வழங்கில் வரனே,ஈர்
ஏழ்புவிக்கண் நீயல்லா தேது. (௫௰௭)

தேவர்க்கும் நின்,அருளே தேடும்,எற்கும் அன்புமிக்கார்
யாவர்க்கும் கிர்பைபொழி அண்ணலே—காவலனே
தேவே பிரமனித்தே செல்வம்,எலாம் வைத்தியப்பக்
கோவே எனக்கே கொடு. (௫௰௮)

நம்யியிரு நெஞ்சமே நாளும் வயித்தியப்பன்
எம்பெருமன் நற்றாள் எழில்வாழ்வும்—உம்பர்
தொழவாழ் பாகதியும் தொண்டன்எற்கே ஈவான்
பழயோன் எனது பரன். (௫௰௯)

நல்லார் குழாம்நடுமே நானிருக்க நாதனே
வல்லாய் கிருபைதான் வைத்தாண்டாய்—எல்லாம்,நீ
என்றேனே வையித்தியப்பா என்றென்றும் காத்தருளி
என்தேவே வாழ்வனைத்தும் ஈ. (கூ0)

நாள் அவமே போக்காமல் நன்னெறியைக் காட்டி,எனை
ஆளவந்தாய் வைத்தியப்ப அய்யாநின்—தாள்,இரண்டும்
என்சிரமேல்க் கொண்டேனுல் ஈவாய் மிகுசெல்வம்
உன்னுபொருள் ஊங்குறிகொள்வேன் ஓர்ந்து. (கூக)

நித்தியனே எங்குந்நிறை நின்மலனே பேரின்ப
முத்திதனை ஈந்தாள் முதல்வனே—பத்தியுடன்
நின்னையே யான்பணிவேன் நீதருவாய் செல்வம்,மிக்க
பொன்னையே வைத்தியப்பா போந்து. (கூஉ)

ஆதி,அந்தம் ஆனபரான் அண்ணல் வயித்தியப்பன்
ஏதியைந்த என்குருவாய் ஈண்டிஎண்பொற்—பாதமலர்
என்சிரமேல் வைத்தருளி ஈந்திடுவன் செல்வம்,எலாம
நன்மனமே வாழ்ந்திருப்போம் நாம். (கூங)

நின்றனுட பத்தருக்கென் நேசம்,எலாம் வைததே,நான்
என்றும்,உன தன்பு,மிக்கேன் என்தனக்கே—குன்றாத
செல்வம்,எலாம் ஈவாய் வயித்தியப்ப தேவ,மிக்க
வல்லவனாய் வாழ்வேன் மகிழ்ந்து. (கூச)

மீ,தருவாய் வாழ்வனைத்தும் வேதா வயித்தியப்பா
நீ,தருவாய் ஆகமங்கள் நீள்மறைகள்—ஓத,ருவே
பெம்மானே என்,றழைக்கும் பெற்றியனே பேருளே
எம்மானே என்று தொழும எற்கு. (கூரு)

நின்னை மதிப்பாய் நினைப்பாளை நேசிப்பேன்
மன்னே வயித்தியப்ப மாமணியே—பொன்னே,என்
எந்தை மிகுசெல்வம் எல்லாம்,ஈந்தென்னுடைய
சிந்தை மகிழ்ச்சிபெறச் செய், (கூசு)

நீ,எனதுள் ளத்தினிலே நித்தமுமே வாழ்ந்திருப்பாய்
தாய்,என,நல் அப்பன்,எனச் சாற்றல்,உறு—தூய்தாம்
அறிஞர்,எலாம் போற்றும் அருள்வயித்தி யப்பா
பெறவும்யான் ஈருலகப் பேறு. (கூஎ)

வரனே மனக்கவலை மாற்றி,எனைத் தேற்று
குருவே அருள்பழுத்த கொம்பே—திருவே,எண்
வேயே பிறந்தொளிசெய் வித்தே வயித்தியப்பத்
தாயே மிகுசெல்வம் தந்தது. (கூஅ)

வாயால் நினை அழைக்க வைத்தியப்பா என்றே,உன்
சேயாய் இருகரமும் சேவடிசேர்த்—தோயாமல்
அன்புமிகுந் தே,உருக ஆக்கம்,எலாம் எற்களிப்பாய்
என்னைமமா றென்,இங் கிதற்கு. (௬௯)

நேசம்,மிகுந் தெப்போதுப் நின்பெயரே ஓலமிட்டு
வாசமலர்ப் பாதம் வழுத்தியே—பூசனையும்
செய்ய வயித்தியப்பா செல்வம்,எலாம் ஈந்தருளி
அய்ய உனக்காள்ச்செய் ஆய்ந்து. (௭௰)

பணிவேன் என் வைத்தியப்பா பாதமலர் நீயே
மணிநாதம் என்,றறிந்தேன் வள்ளால்—குணநிதியே
நிர்க்குணனே நின்மலனே நித்தனே நீதியனே
நற்குணமும் வாழ்வனைத்தும் நல்கு. (௭௧)

பாடி நினைந்துருகிப் பன்னாள்ச் செலுமுன்னே
ஓடி வருவாய்,என் உள்ளக்கண்—தேடி,நீ
என்தனக்கே செல்வம்,எலாம் இங்களித்தல் வைத்தியப்பா
நின்தனக்கே கீர்த்தி நிசம். (௭௨)

பிறவா நெறி,அளிக்கும் பேரருளே பெம்மான்
இறைவா வயித்தியப்பா என்றும்—மறவேன்
நினது திருப்பாதம் நீ,ஈ,நற் செல்வம்
எனது வசமாக இங்கு. (௭௩)

பூதங்க ளுள்க்,கலந்த பூரண,உன் தாள்போற்றார்க்
கேதங்கள் நீங்கா என, அறிந்தேன்— நீ,தங்கும்
என்மனது நாள்தோறும் இனபம்,உற் வைத்தியப்பா
பொன்,மிகுதி ஈவாய் புரிந்து. (௭௪)

பூரணமாய் மெய்யாம் பொருளாய் இருநிதியின்
காரணமாய் என்னுள்க் கலந்தோனாய்—ஆரணங்கள்
தேடும் வயித்தியப்பன் சேவடி,நற் செல்வமொடு
நாடும் பதவி,நல்கும் நன்கு. (௭௫)

அடியேன் மனம்,நீ அமரநான் ஆசை
குடியா அமைத்தேன் குருவே—கடவுளே
அம்மானே வைத்தியப்ப ஆண்டவனே ஆரியனே
பெம்மான்,ஈ மிக்கசெல்வப் பேறு. (௭௬)

பேரின்ப வெள்ளமாய்ப் பேரருளாய் எங்கெங்கும்
யாரும்பு கழ்,நல் அருளாளன்—தேரும்
பெருமான் வயித்தியப்பன் பேண்வாழ்க்கைப் பேறும்
தருவான் பரகதியும் தான். (௭௭)

பொறையே நிறைந்த புகழ்வயித்தி யப்பா
இறையே பரனே,என் எண்ணின்—குறியோனே
மானே மரகதமே மாணிக்க மாமலையே
தேனே அளி,செல்வச் சீர். (௭௰௮)

அனல்மெழுகின் வைத்தியலிங்க ஐயா எனது
மனம்,உருகி நின்றிடவே வாயால்—தினமும்,நின்
நன்,விளையாட் டே,புகழ்வேன் ஞானபர செல்வம்,எலாம்
என்வசமாய் ஈந்தருள்வாய் ஈ. (௭௰௯)

தனக்குவமை இல்லாய்,நின் தாள்தொழுவேன் அய்யா
மனக்கவலை மாற்றியே வாழ்வேன்—எனக்கே
குருவயித்தி யப்பா கொடுப்பாய்,எண் செல்வம்
திருவுயர்த்து காய்சித்திச் சீர். (௮௰)

தாய்அறியாப் பிடனுக்குந் தாய்த்துணையாய் உள்ளிருந்து
நேயமுதீ வைத்தியப்ப நின்மலனே—தூயவனே
எல்லாச்,செல் வப்பொருளும் இன்பமுடன் எற்களி,விண்
செல்லாச்செல் லென்னத் தெளிந்து. (௮௰௧)

போத வயித்தியப்பன் பூமணம்போல் எவ்வுயிர்க்கும்
நாதன் எனவாழ்வோன் நற்சீலன்—ஏதம்,இலன்
தேடி நமக்குமிக்க செல்வம்,எலாம் ஈவானைப்
பாடி மனமே வணி. (௮௰௨)

மண்ணோரும் விண்ணோரும் வாழ்த்தும் வயித்தியப்பக்
கண்ணே,கண் உண்மணியே கத்தனே—அண்ணாவே
நின்தனையே போற்றி நிதிபதியாய் நான்,இருக்க
எனதனக்கே செல்வம்,எலாம் ஈ. (௮௰௩)

மண்விண் ணுக் கப்பாலாய் வாவி வளர்ந்த,முக்
கண்,ணண் ணு வைத்தியப்பக் காவலனே—எண்மன்னிச்
செய்,தவம்,மீக் கொண்டோய் திருவிளைகள் எற்களிக்க
மெய்,மனம்,வாக் காற்பணிவன் மெய். (௮௰௪)

மன,வாக்கில் எட்டா மகத்துவமாய் ஞானத்
தனிநோக்கில் ஏய்ந்து சகம் எண்—தனமாச்
சிறந்தோன் வயித்தியப்பன் செல்வம்,எலாம் ஈய
நிறைந்தே இருப்பேன் நிலத்து. (௮௰௫)

மாசில்லாப் பேரருளும் வாழ்வனைத்தும் இங்களிப்பாய்
தேசுள்ளோர் தேவே,நற் செல்வனே—நேசமுடன்
வாசவனும் தேடும் வயித்தியப்பா வாழ்த்தி,நிதம்
பேசுவன்,நின் எண்,பெருமைப் பேறு. (௮௰௬)

முக்கண்,உள தேவா முதல்வா வயித்தியப்பா
எக்கணும் வாழ்வோமே எற்களிப்பாய்—மிக்கசெல்வம்
வேண்டுவனே நின்னை விதேயன் வணங்கும்,என்றன்
ஆண்டவனே ஈவாய் அரசு. (௮௰௭)

முதல்,நடு,ஈ றில்லாத மோனு,நன் முத்திப்
பதம்,அருள்,தே வைத்தியப்பப் பண்பே--நிதம்,இசைப்பேன்
எப்பவமும் ஈர்த்தே என்க்களிப்பாய் செல்வம்,எலாம்
இப்புவியில் என்குரு,நீ யே. (௮௰௮)

முந்தி,ஒரு நாள்,மகிழ்ந்தேன் முன்பு விதிவழியாய்
வந்த,மன இன்னலதை மாற்றியே—புந்திதரும்
ஏரம்பன் சீரருள்நேர் என்குருவே வைத்தியப்பா
காரும்,பன் சீர்,ஈ களித்து. (௮௰௯)

உத்தமனே யானும்,மகிழந் துய்யத் திருக்கருணை
வைத்தவனே என்குருவே வாணி,புகழ்—வித்தகனே
பொன்னூர் வயித்தியப்ப பூரணனே வாழ்வனைத்தும்
எந்நாள் தனிலும்ஈ எற்கு. (௯௰)

மோக உவர்,கடத்தி முத்திக் கரைசேர்க்கும்
ஏக வயித்தியப்ப என்,வரனே—வாகு,மிக்க
தேவா பொறையுடைய செல்வனே சித்துடையாய்
ஈவாய் மிகுசெல்வம் எற்கு. (௯௰௧)

மோனம்,மிக்க நாதனே முத்தா வயித்தியப்பா
யான்,நினைத்த சித்தி,எலாம் யான்பெறவே—தானளித்
திருலக ஆக்கம்,எலாம் எற்கருளிச் செய்ய,இப்
பாருலகில் நிற்கே பரம். (௯௰௨)

யார் அறிவார் நின்பெருமை ஈசா வயித்தியப்பா
ஈருலகார் வாழ்வனைத்தும் ஏற்கீ,இப்—பாரில்
இரவு,பகல் எப்போதும் ஏத்தி,உன்றன் பூதி
விரவி,அணி வாரன்றி வேறு. (௯௰௩)

ஆதியாய்ப் பின்பு அனுதியாய் எங்கும்,நிறை
சோதியாய் நிற்கும் சுமுகனே—நீதியாய்
நாடுபுகழ் வைத்தியப்ப நாதனே நன்றாகத்
தேடும்,நிறை செல்வம்,அளி தேர்ந்து. (௯௰௪)

வந்தாய் குருவாய் வழுத்தி நினைத்தொழுதேன்
சிந்தா குலந்தீரச் செல்வம்,எலாம்—தந்தாள்வாய்
பாக்கியனே ஐயா வயித்தியப்ப பண்ப,எனைக்
காக்க,இனே சீருன்க்கே காண் (௯௰௫)

வானோர் எலாம்,போற்றும் வைத்தியப்பன் செல்வம்,எலாம்
யானே பெறவும்,இவண் ஈவான்,என்—கோன்,ஆவான்
எல்லாம் வலசித்தன் என்தனக்கே எங்கணுமே
நல்லான் என,மனமே நாடு. (௯௰௬)

வேண்டும்,வரங்கொடுக்க வேந்தே வயித்தியப்ப
ஆண்டவ என்னை,உனக் காளாக்கத்—தூண்டா
மணிவிளக்காய்த் தோன்ற,மிக்க வாழ்க்கை அளிக்கப்
பணிவெனக்கே ஈந்தருட்கண் பார். (௯௰௭)

வேதனே ஞான வெயிலவனே வைத்தியப்பா
போதனே எங்குப்நிறை பூரணனே- நாத
எனக்,கெண்,செல் வத்தொகுதி ஈவாய்,எந் நாளும்
உனக்,கன்பு யான்புரிவேன் ஓர்ந்து. (௯௰௮)

பத்தன் எனுந்,தீர்த்தா ரப்பன்தன் பாநூல்,இச்
சித்த வயித்தியப்ப தேசிகனும்—முத்தன்
மகிழ்வுறகன் கெவ்வாறும் வாய்ந்தளித்துக் காத்,தெண்
இக,பர,மும் தந்தருள்வான் ஏய்ந்து. (௯௰௯)

சுந்தரத் தம்மை.சுதனே வயித்தியப்பா
கந்தரத் தெம்மை, ஆள் கார்வணனே—சுந்தரனே
நின்தன்,அருள் மிக்கசெல்வம் நீடாயுள் நல்யோகம்
என்றும்,வளர்ந் தோங்கிடுக எற்கு. (௱)

தனயன்,செய் குற்றம சகி,தந்தை போல
என,தன்பின் யான்,வழுத்தும் இந்நூல்—தனில்உள்ள
எப்பிழையும் நீபொறுப்பாய் என்குருவே வைத்தியப்பா
எப்படியும் நின்,அடியன் யான். (௱௧)

## ஸ்ரீ வயித்தியலிங்க சுவாமிகள்

## தோத்திர வெண்பா

முற்றுப்பெற்றது



ஸ்ரீ கேமல் சுவாமிகள்.

உ

# ஸ்ரீ கேமல் சுவாமிகள்

# தோத்திர வெண்பா.

சீரார் தவவடிவாந் தேவன், அருட் கேமல்பத
(1) நாரார் துதிவெண்பா நான்பாடத்—தாசார்மென்
கூந்தலாள் தெய்வானை கோலக் குறவள்ளி
காந்தனார் முன்னுதித்தோன் காப்பு.

ஆட்கக், குன்றூங், கேமல் ஐயன், பொற் றாள்மலர்க்குச்
சூட, இவ், வெண் பா, நூறுஞ் சொல்லவே—நாடில்நெஞ்சே
பத்தி மிகுத்துப் பணிந்து, சிந்து பூந்துறைவாழ்
சித்தி விநாயகனைத் தேர்.

—:(o)—

கேமல்ஐயா யார்க்குங் கிருபை புரிவோனே
சேமநிதி எற்களிக்குந் தேவனே—நேமமுள்ள
பத்தர்கணஞ் சூழ்ந்துபணி பாக்கியனே பண்ணவனே
நித்தம், எனைக் காத்தாள்வாய் நீ. (க)

கேமல்ஐயா மெய்யன்பர் கேட்கின்ற வாழ்வனைத்தும்
ஆம், என்றே தந்தருளும் ஆரியனே—சேமம், நல்கு
செம்பொன் மலர்ப்பாதச் செல்வப்பெருமானே
நம், பரனை என்றனைக்கா நன்கு. (உ)

எந்நாதன் வைத்தியப்பன் என்றே தொழுதேத்திப்
பொன்னார் பதமலர், யான் பூசனைசெய்—அன்னானே
இந்நாளில்க் கேமல்ப்பேர் எய்தி, இவண் வந்தாண்டான்
எந்நாளும் பூசிப்பேன் யான். (ங)

எனை, ஆள் வயித்தியலிங் கேசனை, இங் கேத்தி
மனம், மகிழந்து வாழ்கின்ற மாண்பின்—உனை, உருகிப்
பாடும் தரம்பெற்றேன் பண்ணவனே கேமல்ஐயா
தேடுவமேல் உண்டோ தெரி. (ச)

-600 008.
18/982
18/982

அண்ணல் வயித்தியலிங்க அப்பன் திருவுரு,என்
கண்ணுள் சதா,தோன்றக் காண்பதுடன்—நண்ணியே
புண்ணியனும் கேமல்ஐயன் பொன்னடியும் போற்றுவதால்
திண்ணம்,நல்வாழ் வெற்களிப்பன் தேர்ந்து. (௫)

தந்தையரம் வைத்தியப்ப சற்குருவாம் முன்னவனே
சுந்தரஞ்சேர் கேமல்பேர் சூட்டியே—வந்தெனையாள்
பொன்னார் கழலோனே பூரணனே செல்வம்,எலாம்
எந்நாளும் ஈந்தருள்வாய் எற்கு. (௬)

உம்பருமே காண,ஒணா ஒண்கேமல் ஐயனையான்
இம்பர்,எளி தில்பணிந்த தைவைக்கேள்—தும்பை
அணிந்த,பத வைத்தியலிங்க ஐயாவை முன்னாள்
பணிந்,திசைத்த பண்ணின் பலன். (௭)

மன்நல் மலர்ப்பாத வைத்தியப்பன் தோத்திரம்போல்
உன்றன் துதிநூல்,ஈ தோதுகின்றேன்—குன்றாத்
திருக்கருணை சேர்,கேமல் சீராளா யோகி
வருக்கத்துள் சேர்த்,தெனையாள் மற்று. (௮)

முத்தருக்கே தொண்டுசெய்வேன் முச்சுடரும் ஒன்றாக்க
நித்தமும்,நல் யோக நெறிபயில்வேன்—வித்தகன்,இவ்
அத்தன்,மாண் கேமல் அருளால் அவன்மலர்த்தாள்ப்
பத்தி,மிக்கு வாழ்வேன்யான் பார். (௯)

நல்வேணா வாவின்,உனை நான்உணர்ந்து பாடஎற்குச்
சொல்,வேத நாயகனார் தொண்டுசெயும்—செல்வம்நிறை
மன்னே,மாண் கேமல்ஐயா நன்றி மறந்தோர்கள்
என்னவிதம் உய்வார் இயம்பு. (௰)

முன்னாள் வயித்தியப்பன் மூர்த்தி குமரவேல்
இன்னோர் துதிகள்,இசைத் தேத்தியதால்—இந்நாள்,இவ்
வல்லார்கள் கேமல்முனி மௌனகுரு பூசைசெய்தேன்
எல்லாம்,முன் விட்டகுறை எற்கு. (௰௧)

யோகநிலை மேன்மேலாய் உண்டாக வேண்டும்,என்ற
தாகம்,மிக வந்தடைந்த தன்மையினால்—வாகுமிகும்
சொற்கேமல் ஐய,உன்மேல் சொற்றனன்யான் இத்துதிநூல்
எற்கருள்வாய் அந்நிலையை ஈங்கு. (௰௨)

நல்லானே கேமல்ஐயா, நாயகனே நின்,அன்பர்
அல்லாதார் தேடி அடுக்கொணா—வல்லானே
பத்தர்எலாம் சூழ்ந்,திந்நூல் பாடித் துதிக்கும்,இடம்
நித்தமும்,நின் சந்நிதிக்கு நேர். (௰௩)

அன்றொருநாள் நீ,இங் கறியாமல் சேர்த்ததுட்டர்
இன்றே,உன் றன்னைவிட் டேகுக,என்—றுன்றன்
வரம்,அளிப்பாய் கேமல்ஐயா வாழ்ந்திருப்பேன் நாளும்
பெரியோர்கள் வாக்கிதெனப் பேசு. (௰௪

நற்றவத்தோர் பூசிக்கும் நாதன்,மாண் கேமல்ஐயன்
பொற்பதத்தான் மோனி புகழ்கேட்கில்க்—கற்ப
வினையுறும்,நற் றேவர்களும் வந்திப்பர் கண்டங்
கறையுறுவான் பின்னுலவுங் காண். (௰௫)

பூரணன்,ஆம் கேமல்ஐயன் பொக்கிஷம்,உள் ஆராயில்
நாரம்மிகு பண்புறுமெய் நான்மறையின்—சாரமொடு
தேவமிர்தம் மெஞ்ஞானச் செல்வம்,மிகு பேரின்பம்
யாவும்,சம் பூரணமே ஆம். (௰௬)

ஆதி,நடு ஈ,றில்லா அற்புதனும் கேமல்ஐயன்
சோதி கடைக்கணித்தால்த் துள்ளுபுலி—சர்துவாய்
மன்னியஆன் கூடி மகிழ்ந்துல்வும் பூசை,கிளி.
நன்,னயத்தோ டுள்க்குலவும் நட்டு. (௰௭)

நிலனும் விசும்பும் நிமிர்காலும் தீயும்
அலரும் இனனும் அரியும்—பலஉடுவும்
கல்லாறும் தீயாறும் கண்ணெதிர்,நாம் காண்கின்ற
எல்லாம்,நம் கேமல்அருள் ஈங்கு. (௰௮)

எப்போதும் என்பூமி எல்லாம் மிகவிளைய
அப்பா,நீ எற்,கிங் கருள்செய்வாய்—முப்போதும்
நின்பாதம் பூசித்து நிற்பேன்,மாண் கேமல்ஐயா
என்பாடல் ஈ,தொன் றிசைத்து. (௰௯)

நன்றுசெயார் தீதுசெய்வோர் நாள்தோறும் பொய்யுரைப்போர்
கொன்றுபுலால் தின்னுபவர் கோளுரைப்போர்—சென்,றெம்
மன்னிக்க வேண்டும்,எனில் மாண்கேமல் தீர்ந்தருளித் [மை
தன்னடிக்காள் ஆக்கிவைப்பன் தான். (௨௰)

காட்டில்ப் பறித்தும்,நற் கன்னியர்கள் கற்பழித்தும்
சேட்டை பல,ஆறு செய்து செய்து—வாட்டம்,மிக
வந்தபின்பும் கைகூப்பி வாராரேல்க் கேமல்ஐயன்
எந்தவிதம் காப்பான் இயம்பு. (௨௰௧)

ஈருறுப்பே பேதம் இதற்காச் சிலதக்கோர்
நாரியர்கள் வஞ்சஇன்பம் நாடுவதென்—பேரறிஞர்க்
கெக்காலும் நல்வரங்கள் ஈவோனே கேமல்ஐயா
மிக்கோனே எற்கு விளம்பு (௨௰௨)

எத்தனையோ பாவங்கள் எண்ணு, நின் ஞுள்ச்செய்தேன்
அத்தனையும் மன்னித் தருள்புரிந்து—புத்திதந்தாய்
நங்கேமல் நாதாவே நத்துவனே அப்பவங்கள்
எங்கேரவே நச்சேன் இனி. (உ௰௩)

பழுதுவரா ஞானநெறி பற்றினர்க்கு நல்ல
வழி, உணர்த்தும் கேமல்ஐயன் வான்தாள்—தொழுதுநிற்போர்
நீரோடும் தாரா நினைவிலராய் மா, யோகச்
சீராள ராய்வாழ்வர் தேர்ந்து (உ௰௪)

தேவர்க் கரசே தெரியாமை யீசல், யான்செய்
பாவச் செயல்அனைத்தும் பார்த்தறிந்தே—யாவும், நீ
மன்னிப்புச் செய்தருளாம் வாஞ்சையை எற்களிப்பாய்
என்னப்பா கேமல்ஐயா இங்கு. (உ௰௫)

செம்பொன்னை யொக்குந் திருவுருவே கேமல்ஐயா
அம்பரனே தேவா அருள்க்கடலே—எம்பெருமான்
என்றே சதா, தொழுவோர் ஏந்திழையார் மோகம்விட்டு
என்றும் மகிழ்ந்திருப்பர் ஈங்கு (உ௰௬)

செல்வமும், நற் கல்வியுடன் சீரும், ஈ கைக்குணமும்
நல்வரமும் எற்களிக்கும் நாயகனே—வல்லவ, மெய்ப்
போதனே ஞானபர புண்ணியனே கேமல்ஐயா
ஆதியே என்றனைக்காத் தாள். (உ௰௭)

ஈகை, ஈன்ற எண்ணம் இலார்செல்வம் துட்டர்கைக்கே
போகும், எனச் சொல்வதுமெய் புண்ணியராய்—ஈகைநலம்
இல்லாரும் கேமல்முன்பு இத்துதிநூல் பாடில், அன்னோர்
செல்வம், நிலை பெற்றிருப்பர் தேர்ந்து. (உ௰௮)

அருள்வடிவே மாண்கேமல், ஐயாவே என்றன்
குருபரனே நல்ல குணநிதியே—மருள்தீர்ந்த
பத்தர்புகழ் இத்துதிநூல் பாடி நடித்துநிதம்
சித்தம், மகிழ்ந்தே, வாழ்வன் தேர்ந்து. (உ௰௯)

தருணம் அறிந்துதவும் சத்தே, நற் சித்தே
மருளை விலக்கிடும், நல் வாழ்வே—பரமே, நின்
பொற்பதத்துக் காளாக்கும் பூசை, ஐந்தும் கேமல்ஐயா
எற்கருளிச் செய்வாய் இயைந்து. (௩௰)

அப்பாவே கேமல்ஐயா ஆரண, நின் மெய்த்தொண்டர்
செப்பாரோ வல்லாண்மை செல்லாமோ—தப்புநெறி
நீ, அவர்தம் உள்ளத், தெந் நேரமுமே வாழ்வதனால்
மீபகம், பெற் றுய்வர், இவை மெய். (௩௰௧)

நாதாவே நாள்மலரால் நல்,அடியார் பூசிக்கும்
பாதா,மாண் கேமல்ஐயா பாண்டரங்கா—தாதாஎன்
றிந்நூல் படித்துநிதம் ஏத்துதொண்ட ரை,மதியார்
என்னவிதம் உய்வார் இயம்பு. (௩௰௨)

கடல்சூழ்ந்த பூமியெங்கும் காக்கின்ற மிக்க
திடம்உடையான் மாண்கேமல் செல்வன்—கடிமலர்த்தாள்
தன்னைத் துதிப்போர் தசநர்தம் கேட்டுவப்பர்
எந்நாளும் வாழ்ந்திருப்பார் இங்கு. (௩௰௩)

நடலைச் செருக்கும்உறூர் நண்பர்ப் பிழையார்
அடிசில் பெரியோர்க் களிப்பர்—படிமிசைவாழ்
வெல்லாம்,நம் கேமல்ஐயன்.இன்னருளே என்பர்;இவ்வ
வல்லாள ராம்,சான்றோர் மாண்பு. (௩௰௪)

மூவுலகும் காண முடியாத் திருவுருவே
பாவமெலாம் போக்குகின்ற பார்வையனே—காவலனே
நல்லாரல் லார்க்,குண்மை நான்,உரைக்கேன் கேமல்ஐயா
எல்லாம்,நின் தன்பெயரோ ஈங்கு. (௩௰௫)

தெள்ளமுதே ஆனந்தத் தேனே,மாண் கேமல்ஐயா
வள்ளலே நின் மலர்த்தாள் வாழ்த்தி,நித்தம்—கள்ளம்,இன்றி
மானதமாய்ப் பூசிப்பேன் வாழ்வனைத்தும் எய்தி,ஒப்பில்
ஞானமயம் ஆயிருப்பேன் நன்கு (௩௰௬)

நறுந்தேனே நாதா,மாண் கேமல்ஐயா நல்லோர்
பெறும்,பேறே ஞானம் பிழம்பே—கறங்காதே
ஓர்நினைவாய் மௌனம்,உற்று உன்பாதம் சிந்திப்பேற்
கார்நிகரொன் றேதுவன்,நீ ஆய். (௩௰௭

அடி,முடி,யொன் றின்றி,ஒளிர் ஐயன்,மாண் கேமல்
வடிவுடையான் தன்மேல்நூல் வாழ்த்திப்—படியாதார்
பத்திமிகுந் துய்வாரோ பாழ்மனதைப் போக்குவரோ
முத்திபெறல் எங்ஙன் மொழி. (௩௰௮)

நெஞ்சுருகி நெக்காடி நித்தமும்,மாண் கேமல்ஐயன்
கஞ்சமலர்ப் பாதங்கள் கண்ணில்ஒத்தித்—தஞ்சம்,என்பேன்
மாதவத்தோர் தாள்மறவார் வல்லவரே முத்தர்தமக்
கீதலுக்கொப் பேதுரைப்பேன் யான். (௩௰௯)

அன்பரைக்காக் கும்,கேமல் ஐயன்றன் சேவடிக்கே
என்புருக இப்பாடல் எப்போதும்—இன்புடனே
பாடித் தொழுபவரைப் பாக்கியங்கள் மௌனநிலை
தேடி வரும்,எனவே தேர். (௪௰

கோறல்முதல் ஐந்துகுற்றம் கூறும்மற்,றெப் பாதகமும்
மாறிவிட வெஃகி,மிக வந்தித்தே—ஈ,றில்
பரமனே என்றவன்பொற் பாதம்,அடை வார்க்கு
வரம்,ஈவான் மாண்கேமல் வாய்ந்து. (௪௰௧)

பாதகங்கள் செய்தவரும் பத்திமிக்,கின் னூல்பாடில்
மாதவனும் கேமல்ஐயன் மன்னிப்பன்—ஓதரிய
சண்டைக் களத்தில் அறிமுகத்தோர் தப்பிவரல்
கண்டதுண்,டவ் வாறி,துவும் காண். (௪௰௨)

வெளியினுளே ஒன்றாய்,இம் மேதினியில் ஐந்தாய்
ஒளிதனக்கும் நல்லொளியாய் உள்வாழ்—தெளிவுணர
யோகநிலை காயசித்தி உண்மை,மாண் கேமல்ஐயன்.
தாகமுடன் எற்கருள்வான் தான். (௪௰௩)

கருணைமிகு கேமல்ஐயன் கட்டழகன் பொற்றாள்
அணைமிட மேனும்,உளத் தன்பு—பெருக,நிதம்
தன்சிரமேற் கொண்டு தவம்புரிவோர்க் கெப்பயனும்
நன்குவரும் மெய்மனமே நாடு. (௪௰௪)

முன்செய்த பாவமும்,பின் மூளுகின்ற தீவினையும்
என்செய்யின் மாறுமென இங்கிசைப்பேன்—என்குருவாம்
இக்,கேமல் ஐயன்,தாள் எய்திடினே எல்முன்,இருள்
புக்கமாண் பின்புலர்ந்து போம். (௪௰௫)

பைம்பொன் மிளிர்பாதப் பாத்திரனே கேமல்ஐயா
ஐம்பூதத் துள்வாழ் அருள்பெருக்கே—நம்பர,இப்
பாடல்,உன்மேல்ச் செய்து பணிந்தேன்,நின் பொற்பதத்தை
ஆடகக்குன் றே,எனைக்காத் தாள். (௪௰௬)

சாந்தகுணம் பேரன்பு தண்ணளி,நல் யோகநிலை
ஈந்தருளுநு மாமுனியே எந்தாயே—வந்துபுகழ்
வல்லானே கேமல்ஐயா வாசி,என்னுள் வாழும்வழி
எல்லாம்,நீ எற்கருள்செய் ஈங்கு. (௪௰௭)

பொல்லா வினைகளெல்லாம் போக்குகின்றான் மாண்கேமல்
நல்லான் என,அறிந்தேன் நான்,நிதமும்—பல்காலும்
பொன்னார் திருமேனி சிந்திப்பேன் போற்றி,என்பேன்
முன்னு,நீ நல்வரம்,ஈ வந்து. (௪௰௮)

மருள்சேரா நல்ல மனம்,எனக்கீந் தாய்,உன்
அருள்பெருகப் பாடுகின்றேன் ஐய—குருநாதா
அண்ணா,ஒப் பில்லாத ஆநந்தக் கேமல்ஐயா
கண்ணே,நீ என்றனைக் கா. (௪௰௯)

முன்பொருநாள் மாண்கேமல் மூர்த்திமுன்பு,அப் போதிருந்த
துன்பொன்றை யான்பணிந்து சொற்றிடவே—அன்புநிறை
நல்வாக் களித்தவணம் நான்மகிழ்ச்சி பெற்றுய்ந்தேன்
செல்வாக்கும் சீரும் சிறந்து. (௫௰)

புன்னகை,யுள்க் கொண்டு புறக்குறியால்த் தோற்றுவிக்கும்
முன்னவனும் கேமல்ஐயன் முன்,பாடல்— அன்பதுகொண்
டிந்நூல் அரங்கேற்ற இக்குறி,இங் கெற்களித்தான்
என்னே,என் கைம்மா றிதற்கு. (௫௰௧)

தேவனும் கேமல்ஐயன் சீரார் பணிசெய்வோர்
யாவரோ ஆனாலும் ஆன்றோரே—பாவச்
செயலான தொன்றுமே செய்யார் அவர்பால்
மயலான தேதும்,மரு வா. (௫௰௨)

தேசிகர்கோன் கேமல்ஐயன் சேவடியே தஞ்சம்,என்று
பாசம்,மிகுந் தெப்போதும் பற்றிநிற்பேன்—மாசில்லா
முப்பூ இரண்டும் முடிப்பேன்,நற் காயசித்தி
எப்போதும் பெற்றிருப்பேன் யான். (௫௰௩)

பேரருள்,எல் லாந்திரண்டு பேண்கேமல் ஐயன்,என
ஓருருவாய், வந்,திங்கே உற்றதனால்—யாரும்,இவன்
சந்நிதிமுன் வந்துநின்று தங்குறையைச் சொல்வாரேல்
அந்நிதிமிடங் காப்பான் அறி (௫௰௪)

சச்சிதா னந்தம் தரும்கேமல் பொற்றாளில்
உச்சிதமாப் பத்திசெயா தொண்முத்தி—நச்சிடுவோர்
எட்டாக்,கொம் பில்,தேனுக் கிச்சித்த நொண்டியைப்போல்க்
கிட்டார்கள் என்றே கிளத்து. (௫௰௫)

புண்ணியரோ இச்சிந்து பூந்துன்றவாழ் கேமல்ஐயன்
தண்ணளியால் முப்பதங்கள் தாண்டினவர்—நண்ணும்,ஒரு
மேலான ஞானநெறி மேவி இனிப்பிறவா
நாலாங் கதியுறுவர் நன்கு. (௫௰௬)

கற்றாவைப் போல்,உள்க் கனிந்து,நிதம் கேமல்ஐயன்
பொற்றாள்,எற் கெப்போதும் போந்தளிப்பன்—உற்றாயின்
எந்நாளும் நன்னாளாய் எக்கோளும் நற்கோளாய்ப்
பன்னாளும் வாழ்வேன்யான் பார். (௫௰௭)

எண்ண முடியா எதிலும்,அடங் கா,கேமல்
அண்ணல் அருள்ப்பெருமை அன்பார்ந்த— புண்ணியரோ
என்னவிதம் எல்லாம் இசைப்பேன்,இவ் ஓர்நூலிற்ச்
சொன்மின்,இங் கெற்கே துணிந்து. (௫௰௮)

பெருங்கருணைப் பேராறே பேரின்ப வாழ்க்கை
தீரும்,கேமல் ஐயா,நீ தஞ்சம்—கரும்பிலிருந்
தூறுகின்ற சாரம்போல் உன்மேல்,இத் தோத்திர நூல்
கூறுகின்ற என்றனை,ஆள்க் கொள். (௫௰௯)

சீராருங் கேமல்ஐயா தேவா பரஞ்சோதி
ஏராருன் தாள்பணிவேற் கெந்நாளும்—யாரும்
பெறுதற் கரிதாம் அணிமாதிப் பேற்றை
உறுதற் கெளிதெனநீ ஓது. (௬௰)

நற்றவமே ஒருருவாம் நம்கேமல் நாயகனே
சற்குணனே ஆண்டவனே தண்டுமிண்டு—பற்பலவும்
செய்யும் கொடிலர்,எனைச் சேராமல்ச் செந்நெறியில்
ஐய,நிதம் காத்தருள்வாய் ஆல். (௬௰௧)

இல்லறத்தில் வாழ்ந்திருந்தே என்மனத்தை யான்,அடக்கும்
வல்லமைகள் தந்தருள்வாய் மாயோகா— பல்லுலகும்
தோற்ற,வ்ளர் கேமல்ஐயா சோதிமய வானவனே
போற்றி,சதா நின்பாதப் போது. (௬௰௨)

தினந்தினமும் யோகநிலை செய்வதுடன் தேவே
அனந்தனே மாண்கேமல் ஐயா—மனங்கறங்கா
துன்னைத் தியானிப்பேன் உத்தமனு வாழ்ந்திருக்க
என்னைப் புரந்தருள்வாய் ஈங்கு. (௬௰௩)

ஐயம்,இன்றி வேதப் பொருள் அனைத்தும் ஆராய்ந்து
பொய்,களைந்த நன்மனத்தோர் போற்றுகின்ற—ஐய,என்றன்
சிந்தை சுழிமுனைசேர் சீருள்வாய் மாண்கேமல்
தந்தை,நற் சற்குருநா தா. (௬௰௪)

நேயம்மிக்க நண்பர் நிதமுழ் தொழுதேத்தும்
தாயில்மிக்க நல்ல தயாளமுளாய்— தூயவனே
காவலனே கேமல்ஐயா கத்தா என்த்துதியாப்
பாவலருக் குண்டோ பயன். (௬௰௫)

நித்தியனே கேமல்ஐயா நின்பணி,கைக் கொள்ளாதார்க்
கெத்தனை தான் சித்திகள்,வந் தெய்திடினும்— சத்தியமாய்
முத்தி,கிடையா,தெனினும் முன்னவன்,நீ முன்னின்றால்ச்
சித்தி,முத்தி சேரும் திடம். (௬௰௬)

அஞ்ஞானம் போக்கா அறிவிலிகள் நாடவொணு
மெய்ஞ்ஞான தீபமாய் வீற்றிருப்பாய்—இஞ்ஞாலத்
தோர்குருவாய் நிற்கின்ற ஓதரிய கேமல்ஐயா
நீர்,மிகுத்,துன் தாள்பணிவேன் நான். (௬௰௭

செப்பரிய வல்லாண்மைச் சிங்கமே கேமல்ஐயா
இப்பெரிய மண்புவி,எண் என்குருவே — அப்பாவே
சிந்தை,பொறி ஐந்தின்வழி செல்லாமல் காப்பவர்கள்
சந்ததமும் வாழ்வரெனச் சாற்று. (௬௰௮)

பேரின்பக் கேமல்ஐயர் பெம்மானே சற்குருவே
யாருனது தாள்மலரை ஏத்துதல்,செய் — வாரென்றால்
முன்னைத் தபோபலத்தால் மூதறிவு மீக்கொண்டுன்
தன்னைத் துதிதொண்டர் தாம். (௬௰௯)

மாற்றுயர்ந்த பொன்னே மரகதமே மாமணியே
எற்றம்,மிகும் கேமல்ஐயர் என்றே,யான் — போற்றுதற்குப்
பூர்வமதி லே,பணித்த புண்ணியங்கள் மேலோங்கி
ஆர்வம்,மிகுத் திங்,கிசைத்த தாம். (௭௰)

வாரிபுடை சூழ்கின்ற வையகத்தோர் வாழ்த்தநின்ற
ஆரியன்,இக் கேமல்ஐயன் அன்புடையேற் — கோர்சற்
குருவாய் இருந்து குபேரன்போல்ச் செல்வம்
தருவான் பிரபு,இவன் தான். (௭௰௧)

தொண்டர்க் கெளியன்,எனச் சொல்,சுருதி வாக்குணர்ந்து
அண்டினன்,யான் உன்மலர்த்தாள் ஆய்ந்தோடி — மண்டலத்
தீவினையை நல்வினையாச் செய்தருளிக் கேமல்ஐயா [தென்
காவலனே எந்நாளுங் கா (௭௰௨)

சூரியனும் தேசடங்கத் தோற்றும சுயஞ்சோதி
ஆரியனே கேமல்ஐயா ஆண்டகையே — சீரியனே
பெம்மானே பேராளா பேசரிய பேறனைத்தும்
எம்மானே தந்தருள்வாய் எற்கு. (௭௰௩)

கல்லினுளே தேரைக்கூண் கற்பிக்கும் கேமல்ஐயா
சொல்லரிய மேலாம் சுகப்பொருளே — பல்காலும்
நின்,றுமம் சொற்று நினது பொற்றாள் போற்றிசெய்வேற்
கெந்நாளும் வாசியிலை ஈ (௭௰௪)

எண்டிசையோர் போற்றும் எழில்ரசமே பேரின்பே
அண்டமெலாம் சூழ்ந்துபணி அற்புதமே — கொண்டலே
அத்தமே ஈவாய்,நின் அன்பர்க்காம் வாழ்,வெற்கே
நித்தமுமே கேமல்பர னேர்ந்து. (௭௰௫)

ஞானச் சுடர்க்கொழுந்தே நாயகமே கேமல்ஐயா
மோனத்திருவுருவே மூதறிவே — ஈன
மருள்சேர் குழாத்தில் மருவாமல்க் காத்,துன்
தெருளோங்கும் அன்பருடன் சேர். (௭௰௬)

வேண்டும்,இது வேண்டாம்,ஈ தென்றுரையா மெய்ப்பொரு
ளூண்டாச் சுடரே,நின் தொண்டன்எனை—ஆண்ட [ளே
அணகா,மாண் கேமல்ஐயா அற்புத,நற் சித்தி
தனை,யான் பெறஅருள்நீ தா. (எ௰எ)

பொன்மயனே கேமல்ஐயா பூரணனே பூசிதனே
சின்மயனே தேசிகனே தேவே,என் —தன்வயமே
முற்றும்,நல வாழ்வளித்தல் முக்காலும் நின்கடனே
நற்றவ,நீ தாய்,தநயன் நான் (எ௰அ)

சிற்பரனே கேமல்ஐயா தேவா,நால் வேதம் உணர்
பற்பலரும் சூழும் பராபரனே—தற்பர,நின்
பாதமலர் போற்றிப் பணிபுரியும் எற்கே,நற்
சாதனம்,ஈந் தாள்கொள்வாய் தான். (எ௰௯)

முத்திநெறி கைக்கொள்ளா மூடர் குழாம்,மதியேன்
பத்தர்மலர்ப்பொற்றாள் பணிக்கிசைவேன்—நித்தமும்,என்
அன்பைப் பெருக்கி அருள்,கேமல் ஐயா,ஓர்
மன்போல் இருப்பேன் மகிழ்ந்து. (அ௰)

வல்லானே காயசித்தி வாழ்வனைத்தும் எற்களிக்கும்
நல்லானே கேமல்ஐயா நாயகனே—நல்லோர்,சொல்
பாடல்படிப்போர் பரமபதம் நேசிப்பர்
நாடி இருப்பர்,அந்தை நன்கு, (அ௰௧)

முத்தனே சற்குருவே மோன,மாண் கேமல்ஐயா
சித்தெலாம் தேடும திரவியமே—கத்தனே
நின்றனை,யான் தஞ்சமென்றேன் நீ,அருள்வாய் நல்யோகம்
என்றனக்கே எந்நாளும் ஈங்கு. அ௰௨)

எந்நாளும் நல்வாழ்வை எற்களிக்கும் கேமல்ஐயா
மன்னு,என் சற்குருவே மாமணியே—பன்னாளும்
நான்என்னும் ஆண்மைவிட்டு மேலாறும் நான்காணக்
கோனே,நின் வாக்குக் கொடு. (அ௰௩)

குருபர,என் நேசக் குழாம்அனைத்தும் காக்கும்
பொருளே,மாண் கேமல் புனிதா—ஒருநாளும்
நின்னை மறவேன் நின்துப்பணி செய்வன்நிதம்
என்னைப் புரந்தருள்வாய் ஈங்கு. (அ௰௪)

நாயகனே கேமல்ஐயா நாள்மலர்கொண் டர்ச்சித்துத்
தாயகின்,நீ என்றுன்பொற் றாள்சேர்ந்தேன்—தூயமுத்தர்
பாதம் பணிந்,தன்னோர்க் கூண் அளிக்கும் பத்தர்,என்றன்
நாதன் எனத்தொழுவேன் நான். (அ௰௫)

அன்னையாய் அப்பனுமாய் ஆவிக் குருதுணையாய்
என்னையாள்க் கொள்வாய்நீ என்றுரைத்தே—மன்னுசீர்ச்
சொற்கேமல் நின்பொற்றாள் தூமலர்தூய் ஏத்திடுவேன்
எற்கீவாய் வாழ்வனைத்தும் ஈங்கு. (௮௰௬)

குருநாதா கேமல்ஐயா கோமானே சொக்கப்
பெருமானே மாதவத்தோர் பேறே—தருவாய்,நின்
மெய்யன்பன் எற்கு,நால் வேதப் பொருளுணர்த்தி
உய்வழிகள் அத்தனையும் ஓர்ந்து. (௮௰௭)

சத்துடனே சித்தாய்ச் சதாநந்த மாத்திகழும்
அத்தாவே கேமல்ஐயா ஆரணனே—நித்தமுய்நீ
என்மனத்துள் வாழ்ந்திருப்பாய் எற்களிப்பாய் காயசித்தி
நின்பதங்கைக் கொள்வேன் நிசம். (௮௰௮)

நாதா,நின் அன்பர்குழாம் நாப்பண்,நான் வீற்றிருக்கத்
தா,தா,நற் பத்தி தனை,நீயே—தாதா,என்
றெந்நாளும் பாடல் இசைப்பேன்,மாண் கேமல்ஐயா
பொன்னார்,நின் பொற்றாள்க்குப் போந்து. (௮௰௯)

கன்றுக் கிரங்கிவந்து பால்,ஈ கபிலையென்
என்றைக்கும் நல்ஊண் எனக்களித்து—என்றன்
கருத்துள்ப புகுந்து,கதி காட்டும்,மாண் கேமல்
நிருத்தா எனைக்கா நிதம். (௯௰)

நல்லோனே கேமல்ஐயா நாதா நவமணியே
வல்லோனே நின்னுடைய வல்லபங்கள்—எல்லாம்
தெரிந்த தொழும்பருடன் சேர்ந்துதொழ வேண்டும்
வரந்தா எனக்கு,மகிழ்ந்து. (௯௰௧)

யானோர் பரமார்த்தன் என்றென்னை ஆள்க்கொண்டாய்
வானோர் நிதம்போற்றும் வள்ளால்,நீ—தானோர்
குருவானாய் கேமல்ஐயா கோமானே தேவர்
பெருமானே எற்கருள்,நற் பேறு. (௯௰௨)

[நின்று
எண்ணிறைந்த அன்பரொடும் யானும்,ஒரு பக்கல், [எண்ணி
உண்ணிறைந்த வேட்கையுலாம் ஒன்றொன்றாய்—எண்ணி,
உள்ளடக்கிக் கேமல்ஐயா ஓதுகின்றேன் இத்துதிநூல்
கள்ளம்இலா உள்ளன்,எனைக் கா. (௯௰௩)

நிறைசெல்வம் யோகநிலை நீடாயுள் சித்தி
மறைபயண் பரகதி,மேன் மாட்சி—பொறைமுதலாம்
எல்லா வரமும்,இவண் எற்கருள்வான் கேமல்ஐயன்
வல்லார் வழுத்தும் வரன் (௯௰௪)

மூவுலகோர் போற்றுகின்ற முத்தனே கேமல்ஐயா
காவலனே தேவாதி கத்தாவே—நாவலனே
நின்பணியைக் கொண்டதனால் நீடூழி வாழ்ந்து,நின்றன்
அன்புசிறந் துய்வேன்யான் ஆம். (௯௫)

தீனமன நண்பர், என்மேல்ச் செப்ப,எணும் கோள் அனைத்
கானல்நீர் ஆக்கும்என்றன் கர்த்தனே—ஞானபர [னம்
முன்னவனே மாண்கேமல் முனினின் றெனைக்காத்து
நன்னிதியும் நல்வாழ்வும் நல்கு. (௯௬)

அன்பரைப்போல்ப் பேசிஎன்முன் அப்புறங்கோள்ச் சொல்ல
வம்பருக்கு நன்மை வருவதிங்ஙன்—என்தேவே [எணும்
தித்திக்கும் தேனே,மெய்த் தேசிகனே மாண்கேமல்
நித்தியமும் என்றனைக்கா நீ. (௯௭)

பொய்மை,மெய் யாக்கப் பொருள்வேட் டுதவிசெயும்
மையல்.மனத் தாரை மதியேன்,யான்—ஐய,இவர்
வாழ்வு,நிலை நிற்காது மாண்கேமல் தாள்தொழுதால்த்
தாழ்வுவரா தென்,றவர்க்கும் சாற்று. (௯௮)

என்,நேர் அடியவர்க்கு யோகநிலை ஈங்களிக்கும்
நன்னார் மிகுசெல்வ நாயக,யான்—பன்னாளும்
போற்றுகின்ற கேமல்ஐயா பூரணனே என்மனத்தைத்
தேற்றி,அளித் தோர்மொழிநீ செப்பு. (௯0௧)

பூங்கமலப் பொற்பாதா பூபதியே சீராளா
தீங்கரும்பே கேமல்ஐய செல்வ,என்றே—நீங்காதுன்
சன்னிதிமுன் நின்று தவம்புரிந்து நின்பெயரை
மன்னனே சதா,செபிப்பேன் வாய்ந்து. (௱)

பண்டுசெய்த நற்றவத்தின் பண்பால்.மாண்.கேமல்ஐயன்
தொண்டுசெயப் பெற்றேன் துதிநூறும்—வண்டமிழால்ப்
பாடி,அரங் கேற்றினன்யான் பண்புகுறி யும்,அளித்தான்
ஈடுஎவரே எற்கிங் கியம்பு. (௱௧)

அன்பு,தயை சாந்தம்,இன்பம் ஆதரவு செய்,கேமல்
மன்னுதவன்.போல,ஒரு மாதேவன்—என்பால்த்
தெரிய,உரை என்யார்க்கு மௌனகுரு தேவன்
ஒருவன்,இன்று கண்டேன்,என் றோது. (௱௨)

சித்தன் குமரவேல் செல்வன் வயித்தியப்பன்
அத்தன் வான்கேமல் ஆரியனும்—முத்தன்
மவுனகுரு இந்நால்வர் வாழ்வளிப்பர் எற்குச்
சிவமயனும் கேமல்அருள் தேடு. (௱௩)

எண்ணிய,என் எண்ணம்,எலாம் ஏற்களிக்கும் இந்நான்கு
புண்ணியர்கள் பொற்பாதம் பூசித்து—விண்ணோர்
மதிக்கத் துதிநான்கால் வாழ்த்துவேன் மாண்கேமல்
பதத்தை மனமே,நீ பற்று. (௱௪)

நாதாக்கள் நீங்களொரு நால்வர் துதிபாடிப்
பாதார விந்தம் பணிந்தேன்,மேல்—ஆதாரம்
சென்றங்கு வீற்றிருக்கச் செல்வ,மாண் கேமல்ஐயா
என் தனக்கு நல்வரங்கள் ஈ. (௱௫)

தெரிந்து மறந்து தெரியாமல் பாவம்
புரிந்தோர்,இந் நால்வர்பதம் போற்றில்—வரம்,தந்து
மன்னிப்பர் என்றறிந்தேன் மாண்கேமல் சந்நிதியின்
முன்,நிற்பேன் வாழ்வேன் மொழி. (௱௬)

நமை,ஆளும் மௌனகுரு நாதன்,மாண் கேமல்
அமரர்புகழ் வைத்தியலிங்க அத்தன்—குமரவேல்
இந்நால்வர் என்கண்முன் எப்போதும் தோற்றுவதால்
என்போலும் நற்றவத்தோர் யார். (௱௭)

எனது,குரு நாதாக்கள் இந்நால்வர் முன்பு
மீனடக்கிக் கைகுவித்து வாழ்த்தி—என,இந்தத்
தோத்திர நூல் நான்கால்த் துதித்துநிற்பேன் கேமல்ஐயன்
காத்,தருளி ஆள்க்கொள்வான் கண். (௱௮)

செந்தமிழால் தன்பேரில் தீர்த்தாரப் பன்சொற்றன்
இந்த,வெண்பாத் தோத்திர நூல் என்,றன்பாய்ச்—சந்தமும்
என்றனக்குக் கேமல்ஐயன் ஈந்தருள்வான் செல்வம்,எலாம்
என்றென்றும் வாழ்ந்திருப்பேன் யான். (௱௯)

இன்பார்ந்த கேமல்ஐயா என்குருவே நின்பேரில்
அன்பார்ந்த இத்துதிநூல் ஆய்ந்துரைத்தேன்—என்புருகி
உன்னை மதுரகவி ஓதிப் புகழ்வதென்
மன்னே மதித்,தருள்செய் வாய்ந்து. (௱௰)

தினமும் திகழ்தரும்,நற் செல்வம்,எலாம் வேண்டி
இனிய,மொழி யாற்,றுதிக்கும் இந்நூல்—தனில்,ஏதோ
குற்றம்,இருந் தாலும் குணமாகக் கொண்டாள்வான்
முற்றுமஉணர் கேமல் முதல். (௱௰௧)

ஸ்ரீ கேமல சுவாமிகள்

தோத்திர வெண்பா

முற்றுப்பெற்றது



ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள்.

600 008

உ

# ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் தோத்திர வெண்பா.

பொன்னார்ந்த பாதமலர்ப் புண்ணியனாம் மௌனகுரு
தன்மேலும் தோத்திர நூல் தான்பாட—நன்மைபுரி
கந்தனுக்கு முன்னுதித்த கர்த்தன் கணபதிதாள்
புந்திதனில் வைத்து,நிதம் போற்று.

—(o):—

மௌனகுரு ஸ்வாமிஎன்றே வானோர்கள் ஏத்த,நிதம்
மௌனியர்கள் சூழ்ந்துபணி வல்லாளா—சௌந்தரிக
மன்னா அகளங்க மங்களனே நின்பணிசெய்
என்னைப் புரந்தருள்வாய் ஈங்கு. (௧)

முன்னாள்,யான் பூசித்த முத்தன் குமரவேல்
இந்நாளில் மௌனகுரு என்று,வந்தான்—என்னைத்தன்
தொண்டன்என் றாள்க்கொண்டான் தொழுதேன்,நீ அஞ்சல்,
பண்டுசெய்த நன்மைப் பலன். [என்றான் (௨)

அண்ணல் குமரவேல் ஐயன் திருவுரு,என்
கண்ணுள்ச் சதா,தோன்றக் காண்பதுடன்—தண்ணளியான்
மௌனகுரு பொற்பதமும் வாழ்த்துவதால் என்றும்,மிக்க
கௌரவமாய் வாழ்வேன்,யான் காண். (௩)

சாந்தகுணத் தோர்,ஓர்காற் கோபம்,உறல் தண்ணளியால்
ஈந்தளிப்போர் ஓர்தருணம் ஈயாமை—பூந்தள்உடல்
தாவி,மிதிப் போர்,கடிக்குத் தப்புவது மௌனகுருந்
தேவன்,அமைப் பென்றே தெளி. (௪)

ஏடு,வெள்ளம் தன்னில் எதிர்த்தேறும் தீயில்,இட்ட
ஏடும்,பச் சென்றே எழுந்துவரும்—ஓடிவந்து
அண்டிநின்றும் தீண்டா தரவமுமே மௌனகுரு
தொண்டர்செயும் கட்டுரையால்ச் சொல். (௫)

எல்லாம் வலசித்தன் இந்நாதன் மௌனகுரு
கல்லானை தின்னக் கரும்பூட்டும்—வல்லான்
திருவடிக்கீழ் வாழ்வளிக்கும் செய்கை,ஐந்துள் ளோர்,நம்
குரு,எனவே சித்தத்தில்க் கொள். (௬)

கலைதேய்வும் பின்வளர்வும் காண்பீர் சசியில்
உலகுபுகழ் மௌனகுரு ஓர்,எண்—நலம்உடையார்
கட்டுரையால் வந்த,திந்தக் காரணந்தான் நன்மதிக்குத்
திட்டம்,இது என்றெவர்க்கும் செப்பு. (௭)

ஆதவன்,தீ நல்குதலும் அம்புலி,நீர் ஈந்திடலும்
சீதமதி தேய்ந்து,கலை சேர்ந்துநிறை—வீதனைத்தும்
அன்புடையான் ஆரா அமுதனை யான் மௌனகுரு
தன்விளையாட் டென்றே,நீ சாற்று. (௮)

சாகரம்,ஓர் எல்லைக்கட் டின்றித் தரைசூழ்ந்தும்
சீகரத்தால் மிக்கபலம் சேர்ந்திருந்தும்—மேவகம்,அற்றே
எட்டுணையும் பொங்கா திருப்பதுகேள் மௌனகுரு
கட்டுரைக்கே அஞ்சியதால்க் காண். (௯)

அத்தா,உன் பொற்பதத்தில் ஆசைவைத்துப் பூசிப்போர்
நத்தார்கள் வஞ்சசுக நாரியர்பால்—முத்தா,நால்
வேத முதற்கொழுந்தே மெய்ப்பொருளே மௌனகுரு
நாத எனக்கருள்செய் நன்கு. (௰)

பாவச் செயலின் பலன்தெளிந்து பார்க்காதே
ஆவல்ப் படி,அந்நாள் யான்செய்த—பாவம்,எலாம்
மன்னித் தினிமேல் மயங்கா மனம்,அளித்தான்
இந்நாள்,இம் மௌனகுரு எற்கு (௰௧)

அநேகம்,மா பாவங்கள் அத்தனையும் மேல்நாள்
சிநேகம்போல் நெஞ்சில்,உனிச் செய்த—விநோதம்,எலாம்
எண்ணவொணா மௌனகுரு எல்லாம்,மன் னித்தென்னைத்
தண்ணளியால் ஆள்கொண்டான் தான். (௰௨)

என்தேவே மௌனகுரு எம்மானே பெம்மானே
குன்றே,நல் வாழ்வளிக்கும் கோமானே—என்று,பொறி
ஐந்துவழி சிந்தை அலையாமல் காப்போர்தாள்
சந்ததமும் யான்தொழுவேன் தான். (௰௩)

நன்றாய்த் தெளியாது நம்பி,நீ சேர்த்த,நட்டர்
இன்றே,உன் தன்னைவிட் டே,ஒழிவர்—என்,றிங்ஙன்
என்,நாதா மௌனகுரு கட்டுரைப்பாய் யான்,மகிழ்ந்து
எந்நாளும் வாழ்ந்திருப்பன் இங்கு. (௰௪)

சிங்கமும்,நின் அன்பர்முன்பு சேவித்து நின்றுதொழும்
புங்கவனே எங்கும்நிறை பூரணனே — சங்கரனே
மன்னே,நன் மௌனகுரு மாதர்மயல் விட்டோர்தாள்
எந்நாளும் போற்றிசெய்வேன் யான், (௰௫)

சோதிமய மௌனகுரு தொண்டர்கள்முன் தீவினைகள்
ஏதும்,நிலை நிற்காதென,உரைநீ — வாதுசெயில்
விண்டலத்தில்த் தாமரைப்பூ வேகமுயல் கொம்,பிவைகள்
உண்,டெனில்,ஆம் என்ன உரை. (௰௬)

ஒப்பிலா ஞான ஒளியே அருள்த்தாயே
அப்பனே மௌனகுரு ஆரியனே — செப்பரிய
முத்தர்க் கமுதளிப்போர் மூவுலகும் போற்றிசெயும்
சித்தர் நிலைபெறுவர் தேர்ந்து (௰௭)

என்தனைஆள் மௌனகுரு இங்கிருப்ப தோராமல்ச்
சென்,றெங்கும் தேடித் திரிதல்,தப்பிச் — சென்ற
கரி,காண்பான் நீள்குடத்துள்க் கையோட்டிப் பார்த்துத்
தெரிவதுபோல் ஆம்,மனமே தேர். (௰௮)

எந்நாளும் என்பூமி எல்லாம் மிகவிளைய
மன்னே,நீ நல்ல வரந்தா,நின் — பொன்னடியைப்
பன்னாள்த் துதித்துப் பணிபுரிவேன் மௌனகுரு
அன்னே எனைக்காத் தருள். (௰௯)

வாசி,நிலை பெற்றிடச்செய் மார்க்கம்,எல்லாம் யான்அறிந்து
தேசிகனே மௌனகுரு தேவனே — நேசமுடன்
மேலாறுங் கண்,டங்கு வீற்றிருந்து உன்றனை,நற்
சீலா,என் றே,துதிப்பேன் தேர்ந்து. (௨௰)

முகத்துக்கண் ணார்,பார்க்கா மௌனகுரு முத்தா
அகத்துக்,கண் ணார்,காணும் அப்பா — சுகம்பொருளே
யாருக்கும் நன்மை செயுட,கொள்கை ஏற்,களித்தாய்
தீரத்தை யும்,பெற் றேன் சேர்த்து. (௨௰௧)

ஞானநூல் சொற்ற நலம்உடைய சித்தர்,உரை
மோனநிலை நிற்க முயல்வோர்கள் — ஞானபர
செல்வன,ஆம் மௌனகுரு சேவடிக்கீழ் வீழ்வார்கள்
நல்வரங்கள் பெற்றுய்வர் நன்கு. (௨௰௨)

ஆனந்த நாதா அருள்க்கடலே மௌனகுரு
தா,நந்தம் என்றுன்னைத் தான்பாடில் — நான்,அந்
நிதியுடனே பத்ம நிதிபெற்றே மேலாம்
விதியுடனே வாழ்ந்திருப்பேன் மெய். (௨௰௩)

நின்மலனே ஆரணனே நித்தியனே கோமளனே
பொன்மயனே மௌனகுரு புண்ணியனே—என்வயமே
குன்று,நல் வாழ்வு,தந்து கும்பகஞ்செய் வல்லமையும்
என்றென்றுந் தந்தாள் இயைந்து. (௨௰௪)

அறிவுள் அறிவாய்வாழ் மௌனகுரு அப்பன்
நறும்,மா மலர்ப்பாதம் நாடி—நெறி தவராப்
பெற்றியுள் பேரறிஞர் பேசரிய வர்சினிலை
கற்ற, வல்லோர் என்றறிந்தேன் காண். (௨௰௫)

காயசித்தி யோகசித்தி காதலித்தே எற்களிக்கும்
தூயமுத்தா பத்தர் தொழுஞ்செல்வா—ஞாயம்,இலா
வம்பர் குழாம்,தப்பி வாழும்வழி எற்கருள்வாய்
எம்பெருமான் மௌனகுரு ஈங்கு. (௨௰௬)

அன்னம் அளிப்பாரால் அண்டினரைக் காப்பாரால்
சொன்ன மொழிதன்னில்ச் சோர்விலரால்—மன்னர்புகழ்
நன்மைபல செய்வாரால் மௌனகுரு நற்றொண்டர்
தன்மை இவையெனவே சாற்று. (௨௰௭)

துன்பம்,இன்பம் இவ்விரண்டும் தொல்லை வினைத்தொடர்ச்சி
என்ப,தறிந் தேன்,மயங்கேன் எந்நாளும்—அன்புடனே
மௌனகுரு பொன்னுருவை மானதமாய்ச் சிந்திப்பேன்
கௌரவமாய் வாழ்வேன்யான் காண். (௨௰௮)

எந்தை,உனை வாழ்த்தாதார் ஏன்,பிறந்தார் பூமிதனில்
கந்தம்,மிகும் நின்றாள்க் கமலத்தைச்—சந்ததமும்
சிந்தை அடக்கித் தியானிப்பேன் மௌனகுரு
தந்தை எனைப்புரப்பாய் தான். (௨௰௯)

ஆதரித்தே நாளும் அடியவரைக் காத்தாள்வோன்
மாதவத்தோர் போற்றுகின்ற மௌனகுரு -நாதன்
கடிமலர்ப்பூம் பர்தமதைக் கைக்கொள்வோர்க் கென்றும்
விடமும்,அமிழ் தாகி விடும். (௩௰)

தேவர் தொழவருவார் தேவதரு வும்,தேனும்
ஏவல் செயவருமே எந்நாளும்—ஆவலுடன்
நாதா நவமணியே மௌனகுரு நாயக,பொற்
பாதா பரனே,என் பார்க்கு. (௩௰௧)

நித்தியனே மௌனகுரு நின்மலனே பேரின்ப
முத்திதரும் மூவா முதலோனே —புத்தியிலாப்
பொல்லார்க்கு வேதப் பொருளை எடுத்துரைக்கேன்
நல்லார் பதம்பணிவேன் நான். (௩௰௨

மாந்தர், உறுப் பேதிலும், ஓர் மாறுதல்கா ணேன், சிலர்கள்
வேந்தராய் மேலோராய் வீற்றிருக்கச்—சாந்தர்பலர்
சென்றவர்முன் கைகட்டி வாய்புதைக்கச் செய்திடலென்
என்றுசொல்வாய் மௌனகுரு எற்கு. (௩௰௩)

நன்றி அறியாரும் நல்வினத்தைச் சேராரும்
கொன்று புலால் அருந்தும் கொள்கையரும்—சென்றிந்த
மௌனகுரு தாள்தொழுதால் மன்னிப்புப் பெற்,றென்றும்
கௌரவமாய் வாழ்ந்திருப்பர் காண். (௩௰௪)

சிந்தனையால் வாக்குரைநால் செய்கையால் இவ்வுடற்கு
வந்த, பல பாவம், எலாம் மன்னித்துச்—சிந்தை
மயங்காவாழ் வெற்களித்தான் மௌனகுரு ஸ்வாமி
சுயஞ்சோதி என்பேன் துணிந்து. (௩௰௫)

வானவர்கள் வந்து வரம்பெறும், நின் சந்நிதிமுன்
யான்ஒருவன் நின், றவ்வா றர்ச்சித்தேன்—தா, நலமார்
யோகசித்தி ஞானசித்தி ஒப்பரிய மௌனகுரு
மா, கனக வள்ளால் மகிழ்ந்து (௩௰௬)

தூண்டா மணிவிளக்கே சொக்கே, எம் மௌனகுரு
ஆண்டானே அம்பலவா அத்தாவே—பாண்டரங்கா
பூமணக்கும் சோலைசூழ் பூபதியே நாயேன்றன்
பா, மணக்கும் நின்றன் பதம் (௩௰௭)

தேவர்முத லோர்புகழும் செல்வன், ஆம் மௌனகுரு
காவலன்றன் பொற்பதத்தைக் கண்ணில்ஒத்திப்—பூவில்ப்
பொதிந்துதினம் போற்றும், மனம் புண்ணியர்க்கே கிட்டும்
சிதைந்த, மனத் தார்க், குறுமோ செப்பு. (௩௰௮)

தெய்வத்தில் நம்பிக்கை தேர்ந்த திறத்தோரை
வையகத்தில்க் கண்டால் வணங்கி, என—ஐயர்களே
மௌனகுரு தொண்டர்களே வல்ல நமரங்காள்
யௌர்னபரங் காள், என்பேன் யான் (௩௰௯)

வாடும் பயிர்காக்கும் வான முகிலாக
நாடி நமர்ப்புரக்கும் நாதன்சீர்—பாடியே
நல்லானே மௌனகுரு நாதா எனத்தொழுவோர்
வல்லாள ரா, நிதம், வாழ் வீர் (௪௰)

எந்தை, நன் மௌனகுரு என், இட்ட தெய்வத்தைச்
சிந்தை மிகமகிழ்ந்து சேவித்துச்—சந்ததமும்
மன்னே எனப்பணிந்து வாழ்த்தித் துதிபாடார்
என்ன பலன்பெறுவார் இங்கு. (௪௰௧)

எல்லாம் நினதுசெயல் என்றே,இம் மௌனகுரு
வில்லார் அருள்ப்பதத்தில் வீழ்ந்தெழுந்து – பல்காலம்
ஏடாரும் நாள்மலர்தூய் ஏத்தி வரம்பெற்று
நீடூழி வாழ்வேன் நிசம் (௪௰௨)

கருணைத் திருமுகத்து மௌனகுரு கர்த்தன்
மருளர்க் ககப்படா மன்னை—உருகி அன்பால்
இந்நாள்,இத் தோத்திர நூல் இவ்வா றிசைத்ததனால்
நன்னாள்,எந் நாளும்,எற்கு நாட்டு. (௪௰௩)

முதல்வன்,இம் மௌனகுரு மோனன்,மிக்க நல்ல
நிதி,எற் களித்தருள்செய் நித்தன்—பதநிழலில்
எக்காலும் வீற்றிருப்பேன் ஏத்தித் துதிசெய்வேன்
எக்கோளும் நற்கோளாம் எற்கு. (௪௰௪)

பூரித்துக் கும்பித்து ரேசித்துப் போற்றும்வழி
யாருக்குக் கிட்டும்,எனில் அன்புடன்,இப் – பாரதனில்
தஞ்சமென மௌனகுரு தாள்தொழும்,மெய் அன்பன்;எற்கே
நெஞ்சம் மகிழ்ந் தே,அளிப்பன் நேர்ந்து. (௪௰௫)

கோகனகப் பூம்பாதர் கோகநதா மௌனகுரு
போகநிலை எற்களிக்கும் உத்தமனே—வாகுமிக்க
மட்டில்லாப் பேரின்ப வாழ்வே,பொன் னம்பொருப்பே
கட்டழகா எற்,குன்,அருள் காட்டு. (௪௰௬)

பயனில் தொழில்புரிந்து பன்னாள்,வீண் பேசும்
கயவர் குழாம்,சேரான் கர்த்தா—சய,சய,என்
றெந்நாளும் நாவால் இசைப்பேனை மௌனகுரு
பன்னாளும் காப்பான் பரிந்து. (௪௰௭)

விண்ணோர் போற்றுகின்ற மெய்ப்பொருளே மௌனகுரு
கண்ணே,நற் செல்வம் கதி,அளிக்கும்—அண்ணலே
சாந்தகுணம் பெற்றென்றும் வாழ்ந்திருப்பேன் சாந்தம்,இலா
மாந்தரைப்போல் யான்மயங்கேன் மற்று. (௪௰௮)

நான்.எனும்,ஓர் எண்ணம் நழுவியே ஆநந்தத [என்றன்
தேன் அமிர்தம்,வாய்ந்தருந்தும் செல்வர்தொழும்—மோனி,
பாவம்,எலாம் போக்குவிக்கும் மௌனகுரு பாக்கியனே
தேவனே நின்பணி,என் தேட்டு. (௪௰௯)

இல்லையென்றே கேட்போர்க்கு எந்நாளும் ஈந்தளிக்கும்
நல்லமனம் பெற்றவரை நான்கண்டேன்—வல்ல,இவர்
பூருவத்தில் மௌனகுரு பூசைமுடித் தே,இந்தக்
காருணியச் சிந்தைபெற்றார் காண் (௫௰)

ஈயாதார் தேட்,டனைத்தும் இவ்வுலகோர் செப்புவபோல்
தீயார்,கைக் கொள்வர்,எனத் தேர்ந்தறிந்தேன்—ஐயாவே
என்றனையாள் மௌனகுரு எற்களி,மெய் மௌனநிலை
என்றென்றும் வாழ்ந்திருப்பேன் யான். (௫௧)

சாதல் பிறத்தல் தனைமாற்ற வல்லவனும்
வேதன்,இந்த மௌனகுரு வித்தகன்,என்—நாதன்
எனக்குச் சிவயோகம் ஈந்துணர்த்திக் காத்து
மனக்கவலை மாற்றும் மருந்து. (௫௨)

மாணிக்க மாரிபொழி வான்முகில்போல் மௌனகுரு
பேணிக் கருணைமழை பெய்வன்,எற்கே—மாணமிக்க
இன்பத்தை இச்சித்து இத்துதிநூல் கொண்டேத்தும்
அன்பனெற்,கோர் வார்த்தைசொல்வன் ஆம். (௫௩)

என்னரசே மௌனகுரு எம்பெருமான் என்றென்றே
நின்,அரிய பொன்அடிக்கீழ் நின்றிறைஞ்சும்—என்னை,என
தன்னையினும் அன்பாக ஆதரித்து வாழ்வளித்து
மன்னே,நீ காத்தருள்வாய் வந்து. (௫௪)

சஞ்சிதமும் ஆகாமியமும் தவிர்ந்தாலும்
துஞ்சா பிராரத் துவம்,என்பர்—அஞ்சாது
செல்வன்,இந்த மௌனகுரு சேவடியே தஞ்சம்,என்பேன்
நல்வரங்கள் பெற்றுய்வேன் நான். (௫௫)

மூவேழ் உலகுக்கும் முன்னின் றருள்புரியும்
கோவே,நன் மௌனகுரு கோமளனே—தேவே,ஓர்
மேதா மணியே,நல் மெய்யடியார் போற்றுகின்ற
நாதா எனக்குன் அருள் நல்கு. (௫௬)

கல்லா மனத்தாரும் கைதொழுதால் அன்னோரை
வல்லாளர் ஆக்கி வரம்அளிக்கும்—நல்லானே
என்தேவே மௌனகுரு எல்லாம்,இங் குன்விளையாட்
டென்றறிந்தே கைதொழுதேன் யான். (௫௭)

நினைப்புகழ நாத்,தந்தாய் நித்தமும்நின் பாதம்
தனைத்தொழ,நற் கை,தந்தாய் சாந்த—மனத்தைக்
கொடுத்தாய் நினைக்கஉனை மௌனகுரு கோவே
படித்தேன் துதிநூல்,கண் பார். (௫௮)

ஸ்வாமி இந்த மௌனகுரு சந்நிதியில் இத்,துதிநூல்
நேமம் உடன்படிப்போர் நிச்சிதமாய்—சேமம்
நிறைசெல்வம் பெற்,றுயர்ந்து நீடூழி வாழ்வார்
மறைமொழி,ஈ தென்றே மதி. (௫௯)

நல்லகுரு இல்லார்க்கு ஞானம்இல்லை என்றுறுதி
சொல்லும்,அன்றோ பற்பலநூல் சோதிக்கில்—வல்ல,முத்தர்
நால்வர்,துதி நான்பாட மௌனகுரு நாதன்,இந்தச்
சீலன்,வரம் எற்களித்தான் தேர்ந்து. (கூ0)

அப்பனே தூய சுடர்வயிரத் தால்,இழைத்த
செப்பே,நற் றேவே சிகாமணியே—அப்பனே
உன்தாள் சரண்புகுந்தேன் உத்தமனே மௌனகுரு
நின்பெயரே எல்லாம் நிசம். (கூ௧)

வல்லானை மௌனகுரு வந்தெனைக்கா என்றேத்தில்
நல்லார்ல் லார்,மற்றும் நன்றியுணர்—வில்லார்
உறுவர்நல்வாழ் வெண்ணியபோல் போர்முகத்தில் ஓர்,நல்
அறிமுகத்தோர் போல்,என் றறி. (கூ௨)

மேதா மணியான மேலோர் திறம்பிழையேன்
எதும் புரண்டுரையேன் என்னுவால்—சூதுசெயேன்
நன்றிமறந் தோரொவரும் நன்மைபெறார் என்பது,மெய்
என்றுணர்த்தார் மௌனகுரு எற்கு. (கூ௩)

எனைப்புரப்போன் வானோர்கள் ஏத்துகின்ற தேவன்
அனைத்துயிரும் ஆட்டிவைக்கும் அத்தன்—தனைத்துதிக்கும்
நல்லோரைக் காத்து நலம் அளிக்கும் நாதன்,இந்த
வல்லான்,நம் மௌனகுரு வாம். (கூ௪)

உற்றதுணை நாயேற் குனதுபொற்றாள் யோகவழி
கற்ற,எற்கு மேலாம் கதி அளிக்கும்—கொற்றவனே
தெய்வ சிகாமணியே தென்னூர்,நன் மௌனகுரு
ஐய எனைக்காத் தருள். (கூ௫)

பொருள்வாங்கிப் பொய்வழக்கை ஆதரிக்கும் புல்லர்
பெருவாழ்வு குன்றுதல்,மெய் பெம்மான்—அரியபரன்
வல்லான்,இம் மௌனகுரு தாள்பணிந்தால் வாழ்வுகுன்றார்
நல்லோர்கள் வாக்கிதென்றே நாட்டு. (கூ௬)

முத்தன்,மா மௌனகுரு முன்னோன் புகழுடைய
சித்தன் தனதுபொற்றாள் சிந்திக்கும்—பத்தர்
பழவினைகள் போக்கிப் பரஞான யோக
வழியவர்க்குக் காட்டும் வரன். (கூ௭)

மன்னே உயிர்த்துணையே மௌனகுரு ஆண்டகையே
பொன்னே,கண் உள்மணியே பூரணமே—நின்னை,யான்
கண்டேன் துதித்தேன் காதலுற்றேன் மாதவங்கள்
பண்டே புரிந்த பலன். (கூ௮)

வானவர்தம் கோவே,என் மௌனகுரு நாயகமே
ஞானமயக் குன்றே நடுவிலகேன்—யான்,என்மன
மாயை அழிக்கும்,மா வல்லமையும் பெற்,றுன்பேர்
நாயேன் சதா,துதிப்பேன் நன்கு. (௬௯)

மாணிக்க மேனியன்,இம் மௌனகுரு பொற்றாளைப்
பேணி,நித்தம் பூசிக்கும் பேரறிஞர்—மாணமிக்க
புண்ணியங்கள் செய்வர்,இந்தப் பூமிதனில் மாதவங்கள்
பண்ணி,அருள் பெற்றிருப்பர் பார். (௭௰)

இறைவா,நன் மௌனகுரு மாதவர்தாள் என்றும்
மறவாதார் அன்றோ,மா வல்லோர்—அறிவு
நிலைதவறார்க் கிவோர்கள் நீடூழி வாழ்வார்
கலைமகள்தன் வாக்கிதுவே காண். (௭௧)

ஐம்புலனும் உள்,அடக்கி ஐயாவே மௌனகுரு
நம்பனே என்றுதொழும் நல்லடியார்—இம்பர்க்
கவலையின்றி வாழ்ந்திருப்பர் காலனுங்,கை கூப்பச்
சிவமயமே ஆவர்,இவர் தேர்ந்து. (௭௨)

நனவு,கன வெப்போதும் நான்மறவேன் நின்றுள்
முனிவரனே மௌனகுரு மூர்த்தி—எனது
இறைவா,நின் தன்னருளை என்போலும் இங்ஙன்
பெற,உரியோர் யாருளர்,நீ பேசு. (௭௩)

முன்னர் குமரவேல் மூர்த்தி வயித்தியப்பன்
இன்னோர் துதிகள்;இசைத் தேத்தியதால்—இந்நாள்,இம்
மௌனகுரு கேமல்பதம வாழ்ததித் துதிஇசைத்துக்
கௌரவமாய்ப் பூசிப்பேன் காண். (௭௪)

வல்வினைகள் நீக்குகின்ற மாமருந்தே மௌனகுரு
நல்லவனே என்பவர்கள் நாடுகின்ற—செல்வம்,எலாம்
பல்லூழி காலம் பரிந்தளிக்கும் பாக்கியமே
எல்லாம,நின் கட்டளையே இங்கு. (௭௫)

உண்ண,உண்ணத் தித்திக்கும் ஓங்காரம்பே மௌனகுரு
புண்ணியனை தேவரெலாம போற்றுகின்ற—அண்ணலே
ஐம்பூதத் துள்ளே அமர்ந்திருக்கும் பெற்றியனே
எம்பெருமான் நல்வரந்தா எற்கு. (௭௬)

வண்டார் மலர்ப்பாத மௌனகுரு பாக்கியனைப்
பண்டாய நான்மறையும் பார்த்தில,யான்—கண்டதனால்
என்னைத்தன் தொண்டுசெய ஈங்கருள்செய் தான்,அதனால்
எந்நாளும் வல்லவனே யான். (௭௭)

எத்தனைதான் சென்மம் எடுத்தாலும் அவ்வவற்றில்
முத்தனும் மௌனகுரு முன்னவனைப்—பத்தியுடன்
நித்தம்நித்தம் போற்றில் நிறைசெல்வம் போகமுமெய்தி
முத்திபெற்று வாழ்வார் மொழி. (௭௰௮)

சென்றுநிதம் மௌனகுரு சீர்சிறந்த சந்நிதிமுன்
நின்று,துதி செய்து,மிக்க நேயமுடன்—என்றன்
குருபரன்என் றேத்தும் குணமுடையார் எல்லாம்
அரியதவம் முன்புரிந்தோர் ஆம். (௭௰௯)

அண்டினரைக் காக்கின்ற மௌனகுரு அத்தா,என்
றெண்டிசையும் போற்றுகின்ற ஈச்சரனே – பண்டெனது
விட்டகுறை நீயும்,இங்ஙன் மேவுகின்றாய் சற்குருவாய்
இட்டம்,இது சொற்றனன்யான் தேர்ந்து. (௮௰)

வேதம்ஒரு நான்காலும் மெய்ப்பொருள்என் றோலமிட
ஆதி,அந்தம் இல்லா தமரந்தபரஞ்—சோதி,நின்பேர்
என்றும் சதாசெபிப்பேற் கென்,நாதா மௌனகுரு
குன்று,நல் யோகம் கொடு. (௮௰௧)

எல்லோர் தமக்கும் இனிதே,செய் வார்கள்,மிக்க
நல்லோர் துறவோர்கள் நாதாக்கள்—சொல்லுகின்ற
புத்தி கடவார்கள் புண்ணியனார் மௌனகுரு
பத்தி மிகுந்ததொண்டர் பண்பு. (௮௰௨)

சித்தம்எலாம் மௌனகுரு சேவடிக்கீழ் வைத்துநிதம்
அத்தா,என் றேத்துதற்கு அன்புநிறை —பத்தர் குழாம்
சென்று,தொழு வேன்,எமது செல்வ,நம ரங்காள்,மா
முன்தவத்தீர் என்பன், அவர் முன்பு. (௮௰௩)

இருநிதியும் நல்லரசும் எவ்வரமும் தந்தாள்
குருபரனே மௌனகுரு கோமான்—பெருமான்,நின்
பொன்அடிக்கீழ் வாழ்ந்துநிதம் போற்றித் தசநாதம்
எந்நாளும் கேட்டுவப்பேன் யான். (௮௰௪)

ஒப்பரிய மௌனகுரு உத்தமனே பெம்மானே
செப்பரிய மேலோர்கள் சீர்பாடல் எப்பொழுதும்
கற்கின்ற வல்லவர்கள் காவலராய் மாமுனியாய்
சிற்பரத்துள் வாழ்ந்திருப்பர் தேர்ந்து. (௮௰௫)

தெய்வ மணியே சிகாமணியே மௌனகுரு
ஐய எனைக்காத் தருள்புரியும்—துய்யவனே
சித்தா,நின் பொன்னுருவை நித்தமும்நான் சிந்தித்துச்
சித்தம்,மகிழ்ந் தே,வாழ்வேன் தேர்ந்து. (௮௰௬)

அஞ்சலித்து நின்றே அரசே, எம் மௌனகுரு
தஞ்சம், என ஓலம் இடும் நக்கோர்கள் — விஞ்சைமிக்க
மாயோக சித்தர் வழியைக், கைக்கொள்வார், பின்
மீயகம்பெற் றுய்வார்கள் மெய். (௮௰௭)

சொல்லால்ப் பொருளால்த் தொடரவொணா மௌனகுரு
வல்லோனை யோகநெறி வாழ்வளிக்கும் — நல்லானை
சீரார், நின் பாதமலர் சேவிப்பேன் என்றனக்கு
ஏரார், நற் காயசித்தி ஈ. (௮௰௮)

அருளேயிங் கோருருவாய் அன்பரகத் துள்வாழ்
பொருளே, எம் மௌனகுரு போதா — கருணைமிக்கோய்
எங்கள் குல தெய்வமே, என்றேத்தும் தொண்டர், எலாம்
மங்களமா வாழ்வர் மகிழ்ந்து. (௮௰௯)

தினந்தினமும் பாபூசை செய்து துதித்து
மனந்தனையும் நல்வழியில் வைத்துச் — சினந்தவிர்தகுரல்
தேவன், இம் மௌன குரு செல்வன், தன் தொண்டளிப்பன்
பாவலர்கள் சொற்றதிது பார். (௯௰)

வல்லவர்க்குள் வல்லவனே மௌனகுரு நாத, மிக்க
நல்லறிவும் மெய்வாழ்வும் நாண்மலர் தூய்ப் — பல்காலும்
நின்றாளைப் போற்றும் நினைவளிக்கும் நல்வரமும்
என்றென்றும் தந்தருள்வாய் எற்கு. (௯௰௧)

உலகத்தோர் பன்முயற்சி உன் அமைப்பென் றோர்ந்து
பலகற்றும் நின்பாதம் பற்றார் — நலனுற்ற
செல்வம் பெறுவதெங்ஙன் சீரார்நன் மௌனகுரு
சொல்க, எற்குன் மோனம் துறந்து. (௯௰௨)

எவ்வுயிர்க்கும் அவ்வுயிராம் ஈசன், இந்த மௌனகுரு
செவ்விதழ்ப்பூம் பாதம், நிதம் சிந்திப்பார்க் — கெவ்வெவர்க்
மேலான நல்வாழ்வும் மெய்ஞ்ஞானமும், உதவி [கும்
நாலாம் கதி அளிப்பன் நன்கு (௯௰௩)

என்னோ டுறவாய் இருப்பதுபோல் பாராட்டிப்
பின்னே கோள்ச் சொல்லெனும் பேதைமனத் — தன்னோர்க்
கோட்சொல்லாப் புத்தி கொடுப்பான், இம் மௌனகுரு [குக்
தாட்டிகனாய் வாழ்வேன்யான் தான். (௯௰௪)

கோளர்வரில் காணக்கண் கூசுதே எற்கவராத
தோளர், நல் லோரெனச்செய் சுந்தரனே — நாளும்
தவர்ப் போற்றும் மௌனகுரு ஸ்வாமி; எனைத் தாங்கிச்
சிவயோகம் தந்துய்யச் செய். (௯௰௫)

இட்டன் தனை,இகழ்ந்தோன் என்னநலம் பெற்றிடுவன்
துட்டன் எனவே சொலப்பெறுவன் — திட்டம்,இது
நீதிமான் மௌனகுரு பத்தர்களை நிந்திப்போர்
எதுபலன் பெற்றிடுவர் இங்கு. (௪௬)

எனைக்காணும் போதெல்லாம் இட்டரைப்போல்ப் பேசி
மனத்துள்வே றெண்ணுகின்ற மாந்தர் — தனைத்தக்கோர்
பாம்பின்வாய்த் தேரைஎன்பர் மௌனகுரு பாதமலர்
ஆம்,பொனடிக் கீழ்,வாழ்வேன் ஆல். (௪௭)

யாரேனும் நின்னடியர்க் கின்னல் நினைப்பாரேல்ச்
சீரேறும் மௌனகுரு தேவே,நின் — பேரருளால்
ஐயம்,இன்றி அவ்,அனைத்தும் ஆய்ந்த பழங்கதையாய்ப்
பொய்யாய்க் கனவாகிப் போம். (௪௮)

நால்வே தமும்,புகழும் நான்முகனும் ருத்திரனும்
மா[illegible]தலாம் தேவர்,எலாம் வந்துநிதம் — நால்திசையும்
சுற்றிநின்று மௌனகுரு தொண்டுசெயப் பின்தொடர்வர்
கற்ற,நல்லோர் சொற்றதிது காண். (௪௯)

எண்ணரிய தேவர்களும் எங்குமுள மன்னர்களும்
பண்ணவரும் வந்துபணி பாதா,நற் — கண்மணியே
வித்தகனே மௌனகுரு வேதா அருள்பெருக
நித்தமும்,என் றெற்கருள்செய் நேர்ந்து. (௫௰)

எனைப்பெரிதாய் எண்ணும்மனம் எல்லோர்க்கும் ஈந்து
மனக்கவலை வாராது வாழ — எனக்குவரம்
தந்தாள், வெண் பாநூறு தானிசைத்தேன் தோத்திரமாய்
எந்தாயே மௌனகுரு ஈங்கு. (௫௧)

கொண்டல்நிகர் மௌனகுரு கோமளன்போல் வேறுதெய்வம்
கண்டதுண்டோ என்பவர்க்குக் காவலாய் — எண்டிசைவாழ்
மாதவர்கள் நாள்தோறும் வந்து,துதி கேமல்என்றோர்
நாதன்,இங்குண் டென்றே நவில். (௫௨)

மவுனகுரு மாண்கேமம் வைத்தியப்பன் ஆதித்
தவகுமர வேல்நால்வர் தம்மைச் — சிவகுருவே
என்றவர்தாள் பூசிப்பேன் எந்நாளும் மௌனகுரு
என்றனைக்காத் தாள்கொள்வான் இங்கு. (௫௩)

முத்தமொரு நால்வரிவர் முன்னின்று தோத்திரங்கள்
பத்துயுடன் நான்குநூல் பாடிவைத்தேன் — மொத்தவெண்
முந்நூற்று ஐம்பதுவாம் முத்தனும் மௌனகுரு [பா
எந்நாளும் வாழ்வளிப்பன் எற்கு. ௫௪)

உணர்ந்து மறந்து உணராமல்ப் பாவம்
துணிந்து புரிந்தோர் துதித்துப்—பணிந்துநின்றால்
இந்நால்வர் மன்னிப்பர் என்றறிந்தேன் மௌனகுரு
என்னுதன் வாழ்வளிப்பன் எற்கு. (௱௫)

நல்அடியார் கூட்டத்தில் நான்சேர்ந்து நாயன்மார்
வல்லவர்கள் நால்வர் புகழ்பாடல்—பல்காலும்
பாடித் தினம்பணியும் பத்திமிக மௌனகுரு
தேடி எனக்களித்தான் சீர். (௱௬)

குமரவேல் வைத்தியலிங்கக் கோமான்,மாண் கேமல்
நமையாளும் மௌனகுரு நால்வர்— தம,தரிய
பொன்உருவம் சிந்தித்துப் போற்றி,இன்னோர் சந்நிதிமுன்
என்துதிநூல் நான்கும்,இசைப் பேன். (௱௭)

மன்னர்பணி மௌனகுரு மாண்கேமல் வைத்தியப்பன்
பொன்னார் குமரவேல் புண்ணியர்கள்—இந்நால்வர்
என்துதிநூல் நான்கும இசைத்து தொழுபவர்க்குப்
பன்னாளும் வாழ்வளிப்பர் பார். (௱௮)

பாவலனும் தீர்த்தாரப் பன்சொற்ற தோத்திரத்தைக்
காவலனும் மௌனகுரு கர்த்தனுமே—ஆவலுடன்
ஏற்றுச் செவிமடுத்தே என்றென்றும் நற்றவத்தோர்
பேற்றை அளிப்பன்,எனப் பேசு. (௱௯)

பண்பார்,நம் மௌனகுரு பாதம் தொழுதேத்தி
நண்பார் கவிஞர்புகழ் நல்லதுதி—வெண்பாவாப்
பாடி,அவன் தாள்தொழுதேன் பத்தன் மதுரகவி
பாடல்எனக் கொள்வான் பரிந்து. (௱௰)

தாயினிலும் மிக்க தயாளமுள மௌனகுரு
சேயனைய யான்,நின்மேல்ச் செப்புகின்ற—நேயம்நிறை
இத்,தோத் திரநூலில் ஏதேனும் குற்றம்உண்டேல்
அத்தா பொறுத்தெனைக்காத் தாள். (௱௰௧)

ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள்

தோத்திர வெண்பா

முற்றுப்பெற்றது.

~~~~~~~~

18|982
~~~~~~~~